# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.

பிலிப்பியர் 2:5

THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

May- June 2024
Volume : 64

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue : 3

## MABC பட்டமளிப்பு விழா–சென்னை











## ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE பட்டமளிப்பு விழா–புதுச்சேரி











## மதுரை மத்திய மண்டல பெண்கள் முகாம்





ஆசிரியரிடமிருந்து........!

# கிறிஸ்துவின் சிந்தை



கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது** (பிலிப்பியர் 2:5) என்று வேதம் கூறுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 2:16) என்று கூறுகிறார், இதன்மூலம் கிறிஸ்துவின் சிந்தை நமக்கு உண்டாயிருக்க முடியும் என்பதை அறியலாம். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை எப்படிப்பட்டது என்பதைக் குறித்து தியானிப்போம்.

## 1. ஒருமனப்பாட்டின் சிந்தை

'நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்பும் உள்ளவர்களாக இருங்கள்' (பிலி.2:2) என்றும் 'கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தை உள்ளவர்களாயிருக்கும்படி தேவன் உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக' (ரோமர் 15:6) என்றும் பவுல் எழுதுகிறார். கிறிஸ்துவின் சிந்தை ஒருமனப்பாட்டின் சிந்தை. இயேசு பிதாவை நோக்கி, 'நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாக இருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்' என்று ஜெபித்தார் (யோவான் 17:21). ஆதி திருச்சபையில் விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாக இருந்தார்கள் (அப்.4:33). கிறிஸ்துவின் சரீரமாகிய நாமெல்லாரும் அப்படி ஏக சிந்தை உள்ளவர்களாய், ஒருமனப்பட்டு செயல்படும்போது சத்துரு செயலிழந்து போவான். உலகம் இயேசுவை அறியும். ஒருமனப்பட்டு செயல்படுவதற்கு நமக்குள் அன்பும் மன்னிப்பும் காணப்பட வேண்டும். மற்றவர்களை நம்மிலும் மேன்மையாக கருத வேண்டும் (பிலி.2:3) என்று பவுல் ஆலோசனை கூறுகிறார்!

## 2. பிறருக்கானவைகளை நோக்கும் சிந்தை

இயேசுவின் சிந்தை ஒரு தன்னலமற்ற சிந்தை. நல்ல சமாரியன் உவமையில், சமாரியன் ஒருவன் ஆசாரியனைப்போல லேவியனைப் போல விலகிப்போகாமல், குற்றுயிராய்க் கிடந்த மனிதனுக்கு உதவி செய்தானே! (லூக்கா 10:30-37). அப்படிப்பட்ட சிந்தை நம்மில் காணப்படவேண்டியது மிக அவசியமாகும். இயேசு நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார் என்றும் 'அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே' என்றும் வேதத்தில் வாசிக்கிறோம் (அப்.10:38; லூக்கா 6:35).

பிரியமானவர்களே, நமக்கு யாராவது நன்மை செய்தால் திரும்ப அவர்களுக்கே நன்மை செய்ய வேண்டும் என்பது தான் நம்முடைய

சிந்தை. ஆனால் உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் அப்படி செய்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள் கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாய் இருப்பீர்கள் என்று இயேசு கூறினார் (லூக்கா 5:33-35).

மேலும் அன்று இயேசுவும், "பாவம் செய்த மனிதரே பரிகாரத்தைப் பார்த்துக்கொள்ளட்டும்'' என்று மனிதரை நினையாமற் போயிருந்தால், மனுக்குலத்திற்கு என்ன நடந்திருக்கும்? மீட்பும், நித்திய வாழ்வும் கிடைக்காமலே போயிருக்கும். அவர் பூமியில் மனிதனாக வந்து, ஊழியம் செய்து, வியாதியஸ்தர் களைச் சுகமாக்கி, பிசாசுகளை துரத்தி, வேதனையிலுள்ளவர்களின் கண்ணீரைத் துடைத்து, இறுதியில் நிந்தை, அவமானம், வேதனை அனைத்தையும் சகித்து, பாரச் சிலுவையைச் சுமந்து மரித்தாரே. இவை அனைத்தும் மனிதகுலத்திற்காகத்தானே. கிறிஸ்துவின் இந்த சிந்தையே நம்மிடமும் காணப்படவேண்டுமென்று ஆண்டவர் வாஞ்சிக்கிறார் (பிலி. 2:5).

## 3. தாழ்மையின் சிந்தை

அப்.பவுல் இயேசுவின் தாழ்மையை மூன்று விதத்தில் இங்கு குறிப்பிடுகிறார் (பிலி.2:6-8). பரலோகத்தில் இருந்து தன்னை தாழ்த்தி இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்தார். இரண்டாவதாக, அடிமையின் ரூபம் எடுத்தார். ஜனங்களுக்கு பணிவிடை செய்தார். சீஷர்களின் கால்களை கழுவினார். மூன்றாவதாக, சிலுவையின் மரண பரியந்தம் தன்னை தாழ்த்தினார். இயேசுவின் சிந்தை தாழ்மையின் சிந்தை. நான் சாந்தமும் மனதாழ்மையுமாயிருக்கிறேன் என்று கூறினார் (மத்.11.29). தங்களுக்குள் யார் பெரியவன் என்று வாக்குவாதம் பண்ணின சீஷர்களுக்கு தாழ்மையை கற்றுக்கொடுத்தார் (லூக்கா 9:46-28). மேன்மைக்கு முன்னானது தாழ்மை என்பதற்கு உதாரணமாக வாழ்த்து காட்டினார். நம்முடைய வாழ்க்கையிலும் கிறிஸ்துவின் தாழ்மை வெளிப்படட்டும்!

## 4. பரிசுத்த சிந்தை

இயேசுவின் சிந்தை பரிசுத்த சிந்தை. இயேசு வார்த்தையிலும் செய்கையிலும் பரிசுத்தராயிருந்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை (1 பேதுரு 2.22). அவர் எல்லாவிதத்திலும் நம்மை போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராய் இருந்தார் (எபி.4:16). என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக் கூடும் என்று இயேசு கேட்டார் (யோவான் 8:46).

அவருடைய பரிசுத்தத்தை குறித்து அநேகர் சாட்சி கொடுத்தார்கள். இவர் தகாதொன்றையும் நடப்பிக்கவில்லை என்று சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி ஒருவன் கூறினான் (லூக்கா 23:41). நான் இவரில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று பிலாத்து கூறினார் (லூக்கா 23:4). மெய்யாகவே இவர் நீதிபரர் என்று ஒரு நூற்றுக்கதிபதி சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான் (லூக்கா 23:47). பிலாத்துவினுடைய மனைவி அவர் நீதிமான் என்று கூறினாள் (மத்தேயு 27:19). இயேசுவும் "இந்த உலகத்தில் அதிபதி வருகிறான் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை" என்று சவால் விட்டு கூறினார் (யோவான் 14:30).

இன்றைக்கு செல்போனையோ, கம்ப்யூட்டரையோ பார்த்தாலே அசுத்த சிந்தை உண்டாக்குகிற வீடியோக்கள், போட்டோக்கள் தான் ஏராளமாக காணப்படுகிறது. தேவ ஜனமே! பவுல் கூறுவது போல நாமும் வெட்கமான அந்தரங்க காரியங்களை வெறுத்து பரிசுத்த சிந்தையை நாடுவோமாக. உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எனவகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலிப்பியர் 4:8).

## 5. ஜெபிக்கிற சிந்தை

இயேசுவின் ஜெப வாழ்க்கையை கண்டு ஆச்சரியப்பட்ட சீஷர்கள் தங்களுக்கும் ஜெபிக்க கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள் (லூக்கா 11:1). ஜெபம் அவருடைய வழக்கமாகவும் சுவாசமாகவும் இருந்தது. சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும், விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். கிராமங்கள் தோறும் பட்டணங்கள் தோறும் சுற்றித்திரிந்து ஊழியம் செய்தாலும் அவருடைய தனிப்பட்ட ஜெப நேரத்தை வேறு எதற்கும் விட்டுக் கொடுக்கவில்லை. அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபம் பண்ணினார். சாயங்காலமான போது மலையின்மேல் ஏறி தனித்து ஜெபம்பண்ண சென்றார். இராமுழுவதும் ஜெபித்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (மாற்கு 1:35; மத்.14:23; லூக்கா 6:12). பிதாவோடு உள்ள உறவுதான் பிரதானமான ஊழியம் என்பதை நன்கு அறிந்திருந்தார். ஆம், ஜெபத்தில் தேவனை சார்ந்து செய்யாத எந்த ஒரு காரியத்தையும் தேவன் அங்கீகரிப்பதில்லை. இன்றைக்கு நம்முடைய ஜெப சிந்தையை சிதறடிக்கக்கூடிய அநேக காரியங்கள் காணப்பட்டாலும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கிறிஸ்துவின் ஜெப சிந்தையை தரித்துக் கொள்வோம்.

## 6. பாடுகளின் சிந்தை

பேதுரு தனது நிருபத்தில், கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள் என்று எழுதுகிறார் (1பேதுரு 4:1). கிறிஸ்துவுக்காகப் பாடுபடவும், பாடுகளை எதிர்நோக்கவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 2:21). கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல அவர் நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலிப்பியர் 1:29). கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்றும், அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம் என்றும் பவுல் தீமோத்தேயுக்கு எழுதுகிறார் (2 தீமோ.2: 12; 3:12). பாடுகள் நம்மை பரிசுத்தத்தில் பூரணப்படுத்தும். உயிர்த்தெழுதலின் வல்லமையை நம்மில் கொண்டு வரும் (பிலி.3:10). இன்று அநேகர் கிறிஸ்தவர்களுக்கு பாடுகள் இல்லை என்று தவறாக போதிக்கின்றனர். பவுல் கிறிஸ்துவுக்காகவும் சுவிசேஷத்திற்காகவும் பல பாடுகளை அனுபவித்தார் என்று வேதம் கூறுகிறது (2 கொரி. 11:23-28). நாம் கிறிஸ்துவுக்காக என்ன பாடுகளை அனுபவித்திருக்கிறோம்? NO CROSS. NO CROWN; NO PAIN. NO GAIN என்பதை மறந்து போக வேண்டாம் (ரோமர் 8:18; எபி.12:2)!

## 7. தேவசித்தம் செய்கிற சிந்தை

இயேசு எதையும் தன் விருப்பத்தின்படி செய்யவில்லை. “என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகட்டும்” என்பதே அவர் சிந்தையின் குரல்

(லூக்கா 22:42). நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்கு சித்தமானதையே நான் தேடுகிறேன். என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன். என்னை அனுப்பியவருடைய சித்தத்தின்படி செய்வதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று இயேசு கூறினார் (யோவான் 5:30;6:38;4:34). மரணபரியந்தம் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய தன்னை அர்ப்பணித்திருந்தார்.

இப்படிப்பட்ட சிந்தனையின் நிமித்தமாக, “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்னும் நற்சான்றிதழைப் பிதாவிடமிருந்து அவர் பெற்றார். நாமும் தேவனின் சித்தத்தை அறிந்து, அதற்கு கீழ்படிய நம்மை முற்றிலும் அர்ப்பணிப்போம்.

## 8. தேவ ராஜ்யத்தைக் குறித்த சிந்தை

இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே இயேசு இவ்வுலகத்தில் வந்தார் (லூக்கா 19:10). ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் சுவிசேஷம் பிரசங்கித்தார் (மத்தேயு 4:23). எனக்கு வேறே ஆடுகளும் உண்டு (Other Sheep), அடுத்த ஊர்களுக்கும் செல்ல வேண்டும் (Other towns) என்று ஆத்துமாக்களைக் குறித்த சிந்தையோடு செயல்பட்டார் (யோவான் 10:16; மாற்கு 1:38).

அருமை தேவ ஜனமே! இன்றைக்கு வருமானம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?, பிள்ளைகள் உயர்ந்த படிப்பு படிக்க வேண்டும், வீடு, வாகனம் வாங்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிற நாம், ஆத்துமாக்களை குறித்த சிந்தையும் பரலோக ராஜ்யத்தை குறித்த சிந்தையும் உடையவர்களாக நாம் இருக்கிறோமா என்று சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இயேசுவைப் போல ஆத்தும ஆதாயம் செய்வோம். அவருடைய பிரதான கட்டளையை நிறைவேற்ற அர்ப்பணிப்போம் (மத்.28:19-20). தேவ ராஜ்யத்தைக் குறித்த சிந்தை உடையவர்களாய் இருப்போம்! மாரநாதா!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்


**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


பாகம் :2 (... தொடர்ச்சி)

## நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பதாக நடைபெறும் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களில் பல இன்று நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

### 1. ஐரோப்பிய சங்கம்

கடைசி நாட்களில் பொருளாதாரச் சீரழிவு உண்டாகும்போது குறிப்பாக, 10 நாடுகள் இணைந்து ஓர் ஐக்கியத்தை உருவாக்கி உலகப் பொருளாதாரத்தை சீரமைக்க முயற்சிப்பார்கள். அது இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

தானியேல் 2ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் உலக வல்லரசுகளைப் பற்றி கண்ட சிலையின் காலில் 10 விரல்களைப் பற்றிய விளக்கத்தை, தானியேல் 2:33,34,42,44 வசனங்களில் பார்க்கிறோம். பாதங்களில் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாயிருந்தது. கைகளால் பெயர்க்கப்படாத கல் உருண்டு வந்து, அந்த சிலையின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. இரும்பு என்பது கம்யூனிசத்தைக் குறிக்கும் என்றும், களிமண் என்பது ஜனநாயகத்தைக் குறிக்கும் என்பது ஒரு விளக்கம். எப்படியும் 10 நாடுகளின் கூட்டமைப்பு இருக்கும். இயேசு கிறிஸ்து வரும்போது அந்த நாடுகளின் கூட்டமைப்பு உடையும்.

தானியேல் 7:7ல் 10 கொம்புகள் என்றும், தானியேல் 7:24ல் 10 ராஜாக்களைக் குறிக்கிறது என்றும் இது விளக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 13:1ல் 10 கொம்புகளைப் பற்றியும், வெளி.17:12ல் அந்த 10 கொம்புகளும், 10 ராஜாக்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஐரோப்பிய சங்கத்தில் (European Union) 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இன்னும் சில நாடுகள் சேரும்படி விண்ணப்பித்துள்ளன.

### ஐரோப்பிய சங்கத்தின் சரித்திரம்

2-ம் உலக மகா யுத்தத்திற்குப் பின் இவ்வித ஐக்கியம் அவசியம் என்று ஐரோப்பிய நாடுகளில் சில உணர்ந்தன.

1951ல் நிலக்கரி, இரும்பு வியாபாரத்தை கூட்டாகச் செய்ய பிரான்ஸ், ஜெர்மனி கூட்டு சேர்ந்தன. இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து பின்பு இணைந்தன.

1957ல் ரோமில் மேற்கூறிய இரண்டு நாடுகளுடன் ஐரோப்பிய பொருளாதார சங்கம் European Economic Community மற்றும் Customs Union அத்துடன் European Atomic Energy Community ஆகியவையும் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தி, கூட்டாக செயல்பட தீர்மானித்தன. இந்தக் கூட்டம் ரோமில் நடந்தபடியினால் இதற்கு 'Treaty of Rome' (ரோம ஒப்பந்தம்) என்று பெயரிட்டனர். அதுவும் தீர்க்கதரிசன நிறைவேறுதலாகவே இருந்தது. நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் கால்கள் ரோம ஆட்சியை குறித்தன. அத்துடன் இணைந்திருந்த பாதம் போல இந்த ரோம ஒப்பந்தம் இருந்தது. இந்த சங்கத்திற்கு European Common Market என்று பெயர் வைத்தனர்.

1965ல் இரண்டாம் ரோம ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி 1).அனைத்து பணிகளின் ஆணையம், 2).ஆலோசனை சங்கம், 3).பாராளுமன்றம், 4).நீதிமன்றம் ஆகியவை இந்த சங்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டன.

1973ல் டென்மார்க், அயர்லாந்து, பிரிட்டன் இணைந்தன.

1980ல் கிரிஸ், ஸ்பெயின் இணைந்தன.

1985ல் இந்த நாடுகளுக்கிடையே பாஸ்போர்ட் முறை ஒழிக்கப்பட்டது. இந்த கூட்டமைப்பிலுள்ள எல்லா நாடுகளுக்கும் போக ஒரு நாட்டின் விசா எடுத்தால் போதும்.

1986ல் ஐரோப்பிய சங்கத்திற்கென்று தனி கொடி உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டில் போர்ச்சுக்கல் இணைந்தது.

1993 நவம்பர் 1ல் European Community என்று பெயர் வைக்கப்பட்டது.

1995ல் ஆஸ்திரியா, ஸ்வீடன், பின்லாந்து இணைந்தன. இந்த ஆண்டில் வெளியுறவுக் கொள்கைகள் தீர்மானிக்கப்பட்டன.

2001ல் நீஸ் என்ற இடத்தில் கூடி கிழக்கத்திய நாடுகளில் தகுதியானவற்றை சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

2004ல் ஈஸ்டோனியா, ஹங்கேர், லாட்வியா, லித்துவேனியா, போலந்து, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, செக்குடியரசு இணைந்தன.

2007ல் ருமேனியா, பலகேரியா இணைந்தன.

2008ல் மால்டா - செப்பிரஸ் இணைந்தன.

### பொருளாதாரம்

உலகப் பொருளாதாரத்தில் 31 சதவிகிதம் ஐரோப்பிய சங்கத்தின் பங்கு சீனா, இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

### பொது நாணயம் உருவானவிதம்

- ❖ 1969ல் ஒரே நாணய முறை சிபாரிசு செய்யப்பட்டது.
- ❖ 1991ல் இதற்கான செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.
- ❖ 1994, 1997 ஆகிய ஆண்டுகளில் இதற்கான திட்டம் படிப்படியாக முன்னேறி 1.1.2002ல் யூரோ நாணயம் உருவாயிற்று. ஜெர்மானியர் இதை "ஐரோ" என்று அழைக்கின்றனர்.

### ஐரோப்பிய சங்கத்தின் பிரதான நோக்கங்கள்

ஒரே வியாபார சந்தை - ஒரே வங்கி - ஒரே நீதிமன்றம் - ஒரே கல்வித் திட்டம் - ஒரே குடியுரிமை - ஒரே ராணுவம் - ஒரே எல்லை - ஒரே வெளியுறவுக் கொள்கை - ஒரே தலைவன்.

அந்திகிறிஸ்துவின் வெளிப்படுதல் சீக்கிரம் ஏற்படும். அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் ஐரோப்பிய சங்கம் முழு உலகத்தின் பொருளாதாரத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும்.

### ஐரோப்பிய சங்கத்தின் தலைமையகம்

இதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டிலுள்ள ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) என்ற ஊரில் இருக்கிறது. பாபேல் கோபுர வடிவில் கட்டப்பட்டுள்ளது. தலைகீழாக

வைக்கப்பட்ட சிலுவையின் வடிவில் அமைந்துள்ளது. இங்குள்ள பிரதான கம்ப்யூட்டருக்குப் பெயர் பீஸ்ட் (Beast, மிருகம்) வெளிப்படுத்தலில் அந்திக்கிறிஸ்து மிருகம் என்றுதான் அழைக்கப்படுகிறான் (வெளிப்படுத்தல் 13:1,4).

**2. உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது (மத். 24:14)**

நிறைவேறிக் கொண்டிருக்கும் அடுத்த முக்கிய தீர்க்கதரிசனம் உலகமெங்கும் நற்செய்தி அறிவித்தல். இன்று உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது.

- ஆரம்ப நாட்களில் சுவிசேஷகர்கள், பட்டணங்கள், கிராமங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்து வந்தார்கள். அவ்விதமான ஊழியம் இப்போதும் நடைபெறுகின்றன. மிஷனரிகள் புறப்பட்டுச் சென்று பல்வேறு நாடுகளிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார்கள். இன்றும் மிஷனரி ஊழியங்கள் வேகமாய் நடைபெற்று வருகின்றன.
- பொது இடங்களில் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன, இப்போதும் அது நடைபெறுகிறது.
- வானொலி, தொலைக்காட்சி மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருகிறது. கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் 24மணி நேரமும் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. இன்டர்நெட், வெப்சைட் மூலம் உலகமெங்கும் நற்செய்தி பரப்பப்படுகிறது.
- திருச்சபை வளர்ச்சி ஆய்வின் மூலம் சுமார் இரண்டு லட்சம் பேர் தினமும் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று 5 வருடத்திற்கு முன்பு கண்டறியப்பட்டது.

**சீனா:**

உலகிலேயே அதிகமானவர்கள் அனுதினமும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது கம்யூனிச நாடாகிய சீனாவில்தான் என்பது ஆச்சரியமான உண்மை. தினமும் 50,000 பேர் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

**இந்தியா:**

தினமும் 12000 முதல் 15000 வரை இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

**தென் அமெரிக்காவில்:**

ஒவ்வொரு மணி நேரமும் 400 முதல் 500 பேர் வரை இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்கள். இன்னும் 200 கோடி மக்கள் இயேசுவின் நற்செய்தியை கேள்விப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் சீக்கிரமாக யாவரும் நற்செய்தியை கேட்க வேண்டும் என்ற நோக்கில் நற்செய்திப் பணி தீவிரமடைந்துள்ளது.

தொடரும்...

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# சபை ஐக்கியத்தின் அவசியம்

**திருமதி. கெட்சியாள் மோகன்**
President, Women's Fellowship Department

பரிபூரண ஜீவன் வாசகர்களாகிய உங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! தேவ பிள்ளைகளாகிய நமக்கு சபையோடுள்ள ஐக்கியத்தைப் பற்றி இவ்விதழில் எழுத விரும்புகிறேன்.

### 1.சபை தேவ பிரசன்னம் நிறைந்த இடம்

சபை என்பது தேவ பிரசன்னம் நிறைந்த இடமாக இருப்பதினால். நம் வாழ்வில் முக்கியமானதாகயிருக்கின்றது. மத்தேயு 16:15-18 வரையுள்ள வசனங்களில் பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று கூறுகிறார். இந்த வெளிப்பாட்டின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பேதுருவுக்குக் கிடைத்த இந்த வெளிப்பாட்டைப் போல, நமக்கும் 'இயேசு யார்' என்கிற வெளிப்பாடு வேண்டும். இயேசு யார் என்பதை அறிந்திருக்கிறீர்களா? தேவனால் பெற்ற வெளிப்பாடு உங்களுக்கு உண்டா? தேவனை அறிகிற அறிவின் மேன்மைக்காக, எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன் என்று பவுல் சொன்னார். நீங்களும் இயேசுவை அறிகிற அறிவின் மேன்மையை முன்னுரிமையுள்ளதாகக் கருதி, அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிறிஸ்து யார் என்கிற வெளிப்பாடு உங்களுக்கு அவசியமானதாக இருக்கிறது. எபேசியர் 1:16-20வரையுள்ள வசனங்களில், "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர், தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான, ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று," ஜெபிக்கிறார். நாமும் இடைவிடாமல் ஜெபித்து இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை. தேவனுடைய அநந்த ஞானமானது, சபையின் மூலமாக, உன்னதங்களில் உள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தெரியவருவது, தேவனுடைய அநாதி தீர்மானமாக இருக்கிறது (எபேசியர் 3:9,10). தேவன் பிரித்தெடுத்த பரிசுத்த ஜனமாக சபை இருக்கின்றது. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும், சபையின் அங்கமாக, இயேசுகிறிஸ்துவின் அவயங்களாக இருக்கின்றோம். 1பேதுரு 2:9ஆம் வசனத்தில், "நாம் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறோம்," என்று வாசிக்கிறோம். ஞானஸ்நானத்தின் மூலமாக தேவனோடு உடன்படிக்கை செய்துகொண்ட நாம் அனைவரும், அவருடைய சொந்த ஜனமாகவும் பரிசுத்த ஜாதியாகவும் இருப்பதினால், சபைக்குள் எந்த பாகுபாடும் வித்தியாசமும் இல்லை.

"வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும்" என்று அப்போஸ்தலர் 7:38ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். வனாந்தரத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோதும், இஸ்ரவேலர் சபைக்குள் இருந்தனர். மோசே தேவனுடைய திட்டத்தின்படி ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டினபோது, மேகம் அதின்மேல் தங்கினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமை, அவருடைய பிரசன்னம், ஆலயத்தின் மேல் தங்கி இருந்ததாக 2நாளாகமம் 7:1,2,3 வசனங்களில் வாசிக்கிறோம். மத்தேயு 18:18,19,20ஆகிய வசனங்களில் ''இரண்டு அல்லது மூன்று பேர், என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்," என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். சிறிய சபையானாலும், "குடும்ப ஜெபமானாலும், தேவ பிரசன்னம் அங்கே இருக்கிறது." என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து," என்று யாத்திராகமம் 20:24ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

### 2.சபை தேவனை ஆராதிக்கும் இடமாகும்

ஏசாயா 6:1-4 வசனங்களில், 'ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள், "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம்.' பரலோகத்தில் எப்போதும் ஆராதனை நடந்து கொண்டிருக்கிறது. வெளிப்படுத்துதல் 5:13ஆம் வசனத்தில், வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழிருக்கிற சிருஷ்டிகள் யாவும், ஆண்டவரை ஆராதிக்கின்றன என்று பார்க்கிறோம். பரலோக ஆராதனையும் பூலோக ஆராதனையும் ஒன்றிணைகின்றன. இங்கே ஒரு தொடர்பு காணப்படுகிறது. சபையானது தேவனைத் துதிக்கின்ற இடமாக இருக்கின்றது. 'அவர் யார்' என்று சொல்லி அவரைத் துதிக்கின்றோம். "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்'' என்று சங்கீதம் 100:4ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

### 3.சபை வளர்ச்சி அடைய கிரியை செய்ய வேண்டும்

சபையாகிய சரீரம் வளர்ச்சி அடைய, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாக கிரியை செய்ய வேண்டும் என்று எபேசியர் 4:16ஆம் வசனத்தில் பார்க்கிறோம். நாம் சபையிலே கிரியை செய்யும்படி, அவர் நமக்கு வரங்களைத் தந்திருக்கிறார். 1கொரிந்தியர் 12:4ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி, வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வித்தியாசமான வரங்களையும் திறமைகளையும் தாலந்துகளையும் பயன்படுத்தி, சபை வளரத்தக்கதாக நாம் கிரியை செய்கிறோமா? நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:10).விசுவாசிகள் நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும் என்று பவுல் தீத்துவுக்கு எழுதுகிறார் (தீத்து 3:14).

தபீத்தாள் என்னும் சீஷி நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாக செய்துகொண்டு வந்தாள் (அப்போஸ்தலர் 9:36). யோப்பா பட்டணம் கடலோரத்தில் இருந்தது. அந்த நாட்களில் வானிலையை முன்னறிவிக்கும் கருவிகள் இல்லாததினால், கடலிற்குள் மீன் பிடிக்கச் சென்ற ஆண்கள் பலர் மரித்துவிடுவார்கள். ஆகவே, அநேக விதவைகள் அங்கு காணப்பட்டனர். இந்த தபீத்தாள் அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்துகொண்டு வந்தாள். எயோதியாளும் சிந்திகேயாளும் சுவிசேஷ விஷயத்தில் மிகவும் பிரயாசப்பட்டதாக பிலிப்பியர் 4:2,3 வசனங்களில் வாசிக்கிறோம். இயேசுவானவர் தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். அவருடனேகூட அநேகம் ஸ்திரீகள் இருந்தனர் என்று லூக்கா 8:1-3 வசனங்களில் வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 16:13-15 வசனங்களில் லீதியாள் தன் வீட்டை ஊழியத்திற்காகத் திறந்து கொடுத்தாள்

என்று வாசிக்கிறோம். ஐரோப்பாவில் முதல் சபை உண்டாக அவள் காரணமாக இருந்தாள். மாற்குவின் தாயாகிய மரியாள் வீட்டில் அநேகர் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தனர் (அப்போஸ்தலர் 12:12). அவள் தன் வீட்டை ஜெபத்திற்குத் திறந்து கொடுத்தாள்.

சூசன்னா வெஸ்லியை நாம் நன்கறிவோம். மெத்தடிஸ்ட் சபை ஸ்தாபகர்களும், எழுப்புதலைக் கொண்டு வந்தவர்களுமான ஜான் வெஸ்லியும் சார்லஸ் வெஸ்லியும் தன் தாயாரான சூசன்னா , இயேசுவை எப்படி முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று கற்றுக் கொடுத்ததை வைத்து தான் மெத்தடிஸ்ட் இயக்கம் (Methodist Movement) ஆரம்பித்ததாக கூறப்படுகின்றது. சூசன்னா வெஸ்லியை அந்த இயக்கத்தின் தாய் (Mother of Methodist Movement) என்றும் அழைக்கிறார்கள். அவர்களுடைய பத்தொன்பது குழந்தைகளில் ஒன்பதுபேர் சிறுவயதிலேயே இறந்துவிட்டனர். இறந்த பிள்ளைகளில் நான்குபேர் இரட்டைக் குழந்தைகள். இத்தனை பிள்ளைகளில் ஒருவர் வாய் பேசமுடியாதவராகவும், ஒருவர் காது கேளாதவராகவும் இருந்ததாகக் கூறப்படுகிறது. தன் பிள்ளைகள் எல்லாருக்கும் ஆசிரியையாக இருந்து பாடம் சொல்லிக் கொடுத்து, அவர்களுக்கு ஆராதனையும் நடத்தி இருக்கிறார்கள். இத்தனை வேலைப்பளுவின் மத்தியிலும், அவர்கள் ஒரு ஜெபிக்கிற தாயாகவும் இருந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையோடும் தனித்து ஜெபிக்க நேரம் எடுத்திருக்கிறார்கள். தனக்கும் ஒரு தனி ஜெப நேரத்தை வைத்துக் கொண்டார்கள். ஒரு நாற்காலியில் அமர்ந்து, சமையல் அறையில் பயன்படுத்தும் மேல் ஆடையை (apron) தலைமேல் போட்டுக் கொள்வார்களாம். அது அவர்களின் தனி ஜெப நேரம், யாரும் அவர்களைத் தொந்தரவு செய்யக்கூடாது.

**முடிவுரை**

சூசன்னா வெஸ்லி திருமண வாழ்வில் கடுமையான பிரச்சனைகளைச் சந்தித்திருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்திருக்கிறார்கள். இரண்டுமுறை அவர்களுடைய வீடு எரிந்து போனது. ஒன்பது குழந்தைகள் மரித்துவிட்டனர். கணவர் வருடக்கணக்கில் வீட்டில் இல்லாத சூழ்நிலையிலும் குடும்பத்தை நிர்வகிக்க வேண்டிய நிலைமை. அவர்களே பிள்ளைகளுக்கு ஆசிரியை இதன் மத்தியிலும் ஒரு பெண்மணியால் தன் தனி ஜெபத்தையும், ஒவ்வொரு பிள்ளைகளோடும் தனித்து ஜெபமும் செய்து, பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருந்து, ஆராதனையும் நடத்தி, சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கக் கூடுமானால், வாசித்துக் கொண்டிருக்கிற அருமை சகோதரிகளே! வேதாகம உதாரணங்களையும், சரித்திரத்தில் நமக்கு முன் சென்றிருக்கிற கணக்கற்ற சாட்சிகளையும் பார்த்து உற்சாகமடையுங்கள். நீங்களும் தேவனுக்காவும் சபைக்காவும் இன்னும் அதிகமாக கிரியை செய்ய முடியும். இதுவரை ஒன்றும் செய்யாமல் இருப்பீர்களானாலும், சோர்ந்துபோய் அமைதியாக இருப்பீர்களானாலும் அல்லது இயன்றதை செய்து கொண்டிருப்பீர்களானாலும், உங்களை உற்சாகப்படுத்துகிறேன். எழும்பி கிரியை செய்யுங்கள். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். மாரநாதா!

---

- When a Christian shuns fellowship with other Christians, the devil smiles. When he stops studying the Bible, the devil laughs. When he stops praying, the devil shouts for joy.

  -Corrie Ten Boom

- Some Christians try to go to heaven alone, in solitude. But believers are not compared to bears or lions or other animals that wander alone. Those who belong to Christ are sheep in this respect, that they love to get together. Sheep go in flocks, and so do God's people.

  - Charles Spurgeon



# உன்னதப்பாட்டு : Song of Songs

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


### புத்தகத்தின் தலைப்பு:

தமிழ் வேதாகமத்தில் இப்புத்தகம் **"சாலொமோனின் உன்னதப்பாட்டு"** என்று தலைப்பிடப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமம் இதனை 'Song of Songs' எனத் தருகிறது. கர்த்தர்களுக்கெல்லாம் கர்த்தராகிய நமது ஆண்டவரைக் "கர்த்தாதி கர்த்தர்" என்று நாம் அழைப்பதுபோலவும், ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கும் நமது தேவனை நாம் "ராஜாதி ராஜா" என்று சொல்லுவது போலவும், அவர் தேவர்களுக்கெல்லாம் தேவனாயிருப்பதால் தேவாதி தேவனென்று அழைக்கப்படுவது போலவும் பாடல்களுள் எல்லாம் தலைசிறந்த இந்தப்பாடலை "உன்னதப்பாடல்" என்றும் 'Song of Songs' என்றும் அழைக்கிறோம்.

1 இராஜாக்கள் 4:32-ல் 1005 பாடல்களை சாலொமோன் பாடியதாக வாசிக்கிறோம். அந்தப் பாடல்களிலெல்லாம் இப்பாடல் தலைசிறந்ததாய் அமைந்தபடியால் 'உன்னதப்பாடல்' என்னும் பெயர் பெற்றது எனலாம்.

### புத்தகத்தின் ஆசிரியர்:

இஸ்ரவேல் தேசத்தை ஆண்டுவந்த மூன்றாவது ராஜாவாகிய சாலொமோன்தான் உன்னதப்பாட்டுப் புத்தகத்தை எழுதினான் என உறுதிப்படக் கூறலாம். மிகப்பெரிய ஞானியாக இருந்த சாலொமோன் 15 வெவ்வேறு மிருகங்கள் மற்றும் பறவைகள் பற்றியும், 21 வகையான தாவரங்கள் மற்றும் செடிகொடிகள் பற்றியும் இப்பாடலில் குறிப்பிடுகிறான்.இவையனைத்தும் இஸ்ரவேல் தேசத்தில் காணக்கிடைப்பவையே!

சாலொமோனுக்கு 700 மனைவிகளும் 300 மறுமனையாட்டிகளும் இருந்தனர் என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம் (1இராஜா 11:3).அவர்களில் பெரும்பான்மையோர் புறஜாதிய மன்னர்களின் குமாரத்திகளாவர். அரசியல் ஒப்பந்தங்களுக்காக சாலொமோன் அவர்களையெல்லாம் மணந்து மனைவிகளைப் பெருக்கிக்கொண்டான் எனலாம்.

### சூலமித்தி :

இவர்களெல்லாம் வருவதற்குமுன்பு அவன் நேசித்து (காதலித்து) திருமணம் செய்துகொண்டவளே சூலமித்தி என்னும் இப்புத்தகத்தில் வரும் கதாநாயகி. கலிலேயாவின் தென்பகுதிப் பள்ளத்தாக்குகளிலிருந்த இயற்கைவளம் நிறைந்த ஒரு கிராமத்திலிருந்து இவள் கண்டுபிடிக்கப்பட்டாள்.அழகும் கவர்ச்சியும் மிகுந்த சூலமித்தியை சாலொமோன் திருமணம் செய்துகொண்டான்; இவளே அவனது முதல் மனைவி.

### உன்னதப்பாட்டின் பொருளடக்கம்:

இப்புத்தகத்தை ஒரு நாடகம் எனலாம், அல்லது 'கவிதை நாடகம்' (poetic drama) என்று அழைக்கலாம். சாலொமோனுக்கும் சூலமித்திக்கும் இடையே நடந்த சம்பாஷணைகள் பாடல் வடிவில் தரப்பட்டுள்ளன. அத்துடன் 'எருசலேமின் குமாரத்திகள்' என்று சொல்லப்பட்டுள்ள சாலொமோனின் அரண்மனைப் பணிவிடைப் பெண்களும், எருசலேமின் இளம்பெண்களும் இக்கவிதை நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இப்புத்தகத்தில் மூன்று முக்கிய நிகழ்வுகளைப் பார்க்கிறோம்.

1. சாலொமோனுக்கும், சூலமித்திக்கும் நடந்த திருமண நிச்சயதார்த்தமும், திருமண ஆயத்தங்களும் (1:1-3:5),

2. அவர்களது திருமணமும், கல்யாண ஊர்வலமும், விவாக மஞ்சமும், காதல் மொழிகளும் (3:6-5:1),

3. திருமணம் என்ற உச்சத்தைக்கண்ட அவர்கள் ஒருவரோடொருவர் ஈருடலும் ஒருயிருமாய் இணைந்து வாழுதல் (5:2-8:14) ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகள் ஆறு கவிதைகளாக இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ளன.

மூன்று முக்கிய கதாபாத்திரங்களை இங்கு காண்கிறோம்.

1. சூலமித்தி என்ற மணவாட்டி; கிராமத்துப்பெண்; கடின உழைப்பாளி; மிகவும் கவர்ச்சியான அழகுள்ளவள்.

2. சாலொமோன் என்ற மணவாளன்; குறைவில்லாத அழகுள்ளவன்; நேர்த்தியானவன். ஆட்டு இடையனாக வேடமிட்டு வருகிறான்.

3. மணவாளனையும் புகழ்ந்து பாடும் பாடகர் குழு.

சாலொமோன் இப்புத்தகத்தில் ஒரு மேய்ப்பனாகவும், (1:7-8;2:16;6:2,3), ஒரு ராஜாவாகவும், (1:4-5,12;3:7,9,11;7:5;8:11,12) வருணிக்கப்படுகிறான். ஆத்துமநேசர், நேசர், மணவாளன் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறான்.

**ஆறுபாடல்கள் அல்லது கவிதைகளாக உன்னதப்பாட்டு :**

**கவிதை 1: (1:2-2:7)** இந்த முதல் பாடலில் மணவாளனுக்காக மணவாட்டி ஏங்குதலும் அவளுடைய தோழிகளின் ஊக்கமும் சொல்லப்பட்டள்ளது. மணவாளன் எங்கே இருக்கிறார், எப்போது வருவார் என பல ஆர்வமுள்ள கேள்விகளை மணவாட்டி கேட்கிறாள்; அவளது தோழிகள் அதற்கு பதில் தருகின்றனர், மணவாளன் அவளைத் தேடி வருதலும், ஒருவரையொருவர் சந்தித்து அன்பின் வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளுதலும் இப்பகுதியில் சொல்லப்படுகிறது.

**கவிதை 2: (2:8-3:5)** இந்த இரண்டாம் பாடலில் மணவாளனும் மணவாட்டியும் ஒருவரையொருவர் நினைத்து ஏங்குதலையும், சந்தித்தலையும் பார்க்கிறோம். மணவாளனை மணவாட்டி காண்கிறாள். மணவாளன் மணவாட்டியை வர்ணித்தலும் மணவாட்டி தனது அன்பை வெளிப்படுத்தலும் சுவாரசியமான சம்பாஷணையாக அமைகிறது. கொஞ்சகாலம் மணவாளனைப் பிரிந்திருந்த மணவாட்டி, சிறிதுகால ஏக்கம் நிறைந்த பிரிவு காலத்துக்குப்பின் மீண்டும் அவனைக் கண்டடைதல் மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்திற்கு அவளைக் கொண்டு செல்கிறது.

**கவிதை 3: (3:6-5:1)** சில காலப் பிரிதலுக்குப் பின் மணவாளன் தனது ராஜமகிமையில் திரும்ப வருதலை இந்த மூன்றாம் பாட்டு வருணிக்கிறது. மணவாட்டியின்மேல் அவன் கொண்டிருந்த ஆழமான அன்பை வார்த்தைகளால் வருணிக்கிறான். அவர்கள் இருவரும் சேர்ந்து நேரம் செலவிடுகின்றனர்.

**கவிதை 4: (5:2-6:3)** இந்த நாலாம் பாடல் மணவாளனைத் தான் இழந்துவிடுவேனோ என்ற பயத்தில் மணவாட்டி இருக்கிறாள். அவனைக்குறித்தே பகலெல்லாம் அவளுக்கு நினைவு. இராமுழுவதும் அவனைக்குறித்த கனவுகளே அவளுக்கு. மணவாளனைப்பற்றி சூலமித்தியின் தோழிகள் அவளுடன் உரையாடுதல் அவளுக்கு நேச வைராக்கியத்தை தருகிறது.

**கவிதை 5: (6:4-8-4)** இப்பாடலில் மணவாட்டியின் அழகினை மணவாளன் வருணிக்கிறான். மணவாளன் தன் தோழர்களுடன் மணவாட்டியைப்பற்றி வருணித்துப் பேசுகிறான். எவ்வளவு வருணித்தாலும் இன்னும் மெருகூட்டப்பட்ட

அழகில் உயர்ந்து நிற்கும் மணவாட்டியை நாம் இங்கு காண்கிறோம். மணவாளன்மேல் மணவாட்டி கொண்டிருந்த நேச அனலின் உச்சமாக இங்குக் காட்டப்படுகிறது.

**கவிதை 6: (8:5-14)** இந்தக் கடைசிப் பாடலில் மணவாளனுக்கும் மணவாட்டிக்குமிடையே இருந்த அன்பின் மிகுதி விவரிக்கப்பட்டுள்ளது. அன்பின் வலிமையையும் அன்பின் பெருக்கத்தையும், நேசத்தால் அவர்களிருவரும் மனத்திருப்தியடைவதையும் வருணித்து உன்னதப்பாட்டின் கவிதைகள் நிறைவு பெறுகின்றன.

## உன்னதப்பாட்டு புத்தகத்தின் வியாக்கியானம்

பல்வேறு விதங்களில் உன்னதப்பாட்டுப் புத்தகம் வியாக்கியானம் பண்ணப்பட்டுள்ளது. சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்:

### 1.ஞான அர்த்தமுள்ள காதல் பாட்டுகளின் தொகுப்பு :

இது தொன்றுதொட்டு யூதர்கள் நம்பி, படித்து விளங்க முயலும் வியாக்கியானமாகும். உன்னதப்பாட்டு முழுவதுமே யெகோவா தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் இடையே உள்ள திருமண உறவினையே வர்ணிக்கிறது என்று யூதர்கள் நம்புகின்றனர். தங்கள் தேசம் யெகோவா தேவனுக்கு வாழ்க்கைப்பட்ட மணவாட்டி என்பதை யூதர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். ஏசா.50:1; 54:4,5; எரே.3 அதி; எசே.16:23; ஓசியா 1-3 அதிகாரம் ஆகிய வேத பகுதிகள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. எனவேதான் யூதர்கள் வருடந்தோறும் தங்களது பஸ்கா ஆசரிப்பின் எட்டாம் நாளில் உன்னதப்பாட்டு புத்தகத்தை வாசிக்கின்றனர். இதன்மூலம் தங்கள் மணவாளனாகிய யெகோவாவைத் தங்கள் முழு இருதயத்தோடும் நேசிக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகின்றனர், (உபா.6:4-5).

### 2. இரண்டு கதாப்பாத்திரங்களைக் கொண்ட வியாக்கியானம் :

இந்த வியாக்கியானம் Dr.H.A.அயன்சைடு (Dr.H.A.Ironside) என்பவரால் தரப்பட்டது. இதின் விளக்கம் பின்வருமாறு:

சாலொமோன் ராஜாவுக்கு பாகால் ஆமோன் என்னும் சிற்றூரில் ஒரு திராட்சைத்தோட்டம் உண்டாயிருந்தது. அந்தத் தோட்டத்தைக் காவலாளிகளிடத்தில் அதன் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டுவரும்படி விட்டார், (8:11).

அப்படிக் குத்தகைக்கு எடுத்த ஒரு குடும்பத்தைப் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது. வெவ்வேறு தகப்பன்கள் மூலம் ஒரு தாய் பெற்றப் பிள்ளைகளில் இரண்டு சகோதரிகளும், பல சகோதரர்களும் இருந்தனர் (என் தாயின் பிள்ளைகள்), (1:6). அந்த சகோதரிகளில் ஒருத்தியின் பெயர் சூலமித்தி, (6:13). மற்றவள் சிறிய சகோதரி என்று குறிப்பிடப்படுகிறாள்; அவள் வளர்ச்சி குறைந்தவள், (8:8).

சூலமித்தியை அந்த சகோதரர்கள் கொடுமையாக நடத்தித் திராட்சைத் தோட்டத்துக்குக் காவல்காரியாக வைத்தனர், (1:6). வெளியில் அனுப்பப்பட்ட அழகிய சூலமித்தி, வெயில்பட்டு கரிகறுத்துப்போனாள், (1:6). திராட்சைத் தோட்டத்தைக் காவல்காத்த அவள், திராட்சைத் தோட்டத்தைக் கெடுக்க வந்த குழிநரிகளையும், சிறுநரிகளையும் கண்ணிவைத்துப் பிடித்தாள், (2:15); ஆடுகளையும் மேய்த்து வந்தாள், (1:8). தன்னை அழகுபடுத்திக்கொள்ள இவள் அக்கறைகொள்ளவில்லை, (1:6). இவளே இப்புத்தகத்தின் பிரதானப் பெண்-கதாப்பாத்திரம்.

ஒரு நாள், சாலொமோன் மேய்ப்பனுடைய உடையணிந்து மாறுவேடத்தில் அவள் இருந்த வயல்வெளிக்கு வருகிறான். இருவரும் சந்திக்கின்றனர். அது தூய்மையான காதலாக (காமம் அல்ல) மலர்கிறது. அவனை ஒரு ஆட்டிடையன் என்றே நினைத்துவிட்ட அவளும் அன்பின் வார்த்தைகளை அள்ளித்தந்த அவனிடத்தில்

தன்னை ஈடுபடுத்தி, அவனைத் தனது வருங்காலக் கணவனாக்கும் எண்ணத்தில் பழகுகிறாள். அவன் அவளைப் பிரியமானவள், ரூபவதி, உத்தமி, ராஜகுமாரத்தி, புறா, மணவாளி, சகோதரி எனப் பல பெயர்களால் அழைக்கிறான். அவளுக்கு வெகுமதிகளைப் பரிசளிப்பதாக வாக்குக்கொடுக்கிறான்,(1:8,9,10,11). திரும்பிவந்து அவளை அழைத்துச் செல்வதாகச் சொல்லி விட்டு, தனது வீட்டுக்குத் திரும்புகிறான்.

அவன் சென்றபின்பு, அவள் எப்பொழுதும் அவன் நினைவாகவே இருக்கிறாள்; சில சமயங்களில் அவன் தனது பக்கத்திலிருப்பதுபோல் உணருகிறாள், (3:1). வெகுகாலம் சென்றபின், சாலொமோன் அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள அழைத்துச்செல்லும்படித் திரும்பி வருகிறான். இப்பொழுதோ, மேய்ப்பனாக மாறுவேடத்தில் அல்ல, ராஜ அந்தஸ்துடன் வருகிறான். அவனை அவளால் அடையாளம் காணமுடியவில்லை, (3:6,7). ஆடுமேய்க்கிற கிராமத்துப்பெண்ணாகிய சூலமித்தியை, ராஜாவாகத் திரும்பிவருகிற சாலொமோன் திருமணம் செய்து, அவர்களிருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர் என்பது இப்புத்தகத்தில் புதைந்துகிடக்கும் கதைச்சுருக்கமாகும்.

புத்தகத்தின் மீதமுள்ள பாடல்களெல்லாம் அவர்களிருவருக்கிடையே நடந்த உரையாடல்களையும், ஒருவரது அழகை மற்றவர் வருணித்துப் புகழுவதுமாகக் காணப்படுகிறது. எருசலேமின் குமாரத்திகள் என்றழைக்கப்பட்ட பாடகர்குழுவின் பாடல்களும் உன்னதப்பாட்டு என்ற இப்பாட்டுத்தொகுப்பிற்கு அழகுசேர்க்கின்றன.

இப்புத்தகத்தில் சாலொமோன் ஒரு ராஜாவாகவும், மேய்ப்பனாகவும் குறிப்பிடப்படுகிறான். அவன்தான் இப்புத்தகத்தின் பிரதான ஆண்-கதாபாத்திரம் (கதாநாயகன்).

### 3. மூன்று கதாபாத்திர வியாக்கியானம் :

சிலர் இப்புத்தகக் கதையை வேறுவிதமாகவும் எடுத்துரைக்கின்றனர். சாலொமோன் தனது பரிவாரங்களோடு தனது நாட்டைச்சுற்றி வருகையில் கிராமத்துப் பெண்ணாகிய சூலமித்தியைக் கண்டு, அவளது அழகில் மயங்கி, அவளைத் தனது மனைவிகளில் ஒருத்தியாக ஆக்குவதற்கு முயன்றான். ஆனால் அவளுக்கும் ஆட்டிடையனான வேறொருவனுக்கும் ஏற்கெனவேயிருந்த ஆழமான அன்பின் வலிமையைக் கண்டு அவளைத் தன் நேசருடன் சேரும்படி அனுப்பிவிடுகிறான் என்பதே இந்த வியாக்கியானம். அதன்படி சாலொமோன் நேசரல்ல, கதைகளில் கதாநாயகனுக்கு எதிரியாகவரும் போக்கிரி (Villain) என்கின்றனர். இக்கருத்தினை வெகுசிலரே ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

### உன்னதப்பாட்டு புத்தக வியாக்கியானமும்-கிறிஸ்துவின் மேன்மையும்

தேவனை மையமாகக்கொண்டு ஆண் பெண் அனுபவிக்கும் அன்பின் இன்பங்கள், பாலுறவு ஆகியவற்றை அதிகம் சொல்லுகிறது இப்புத்தகம். திருமணபந்தத்தில் புருஷன் மனைவி இருவரும் தம்மிடையே கொண்டுள்ள உறவையும், இருவரும் சேர்ந்து தேவனிடத்தில் கொள்ளவேண்டிய அன்பின் கடமைகளையும் கற்பிக்கிறது. புதியஏற்பாட்டில் 1கொரி.7:1-5; எபே.5:22-33; 1பேதுரு.3:1-7 ஆகிய வேதபகுதிகளை இப்புத்தகத்தின் வெளிச்சத்தில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

யூதர்கள் இப்புத்தகத்தை வேத எழுத்துக்களின் மகா பரிசுத்தஸ்தலம் என்பர். எனவே, இளவயதுள்ளோரும் பக்குவடையாதோரும் இப்புத்தகத்தை வாசிக்க அனுமதிக்கப்படவில்லை; (பிரதான ஆசாரியன்தவிர வெறெவரும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கக்கூடாதே!). ஆனால் இன்றைய நமது உலகு, சிற்றின்பத்திற்கு அடிமைப்பட்டுள்ளது; பகுத்தறிவில்லாமல் தாறுமாறாய் நடக்கிற பாலுறவுப் பழக்கங்களை சரியென ஒத்துக்கொள்ளுகிறது. தூய்மையான திருமண பந்தத்தில் வெளிப்படும் பாலுறவினை அறியவில்லை. எனவே இத்தகைய சமுதாயச் சூழலில் வாழும் இளைஞர் (ஆண் பெண் இருபாலரும்) உன்னதப்பாட்டு புத்தகத்தை வேதம் கற்பிக்கும் பார்வையில் வாசித்துப் பயனடைதல் நலம்தரும்.

சரியான ஆண் பெண் அன்பு, திருமணம், பாலுறவு ஆகியவற்றை இப்புத்தகம் உயர்த்திச் சொல்லுவதுபோலவே தேவன் தமது மக்கள்மேல் கொண்டுள்ள உண்மையான அன்பையும் எடுத்துச்சொல்லுகிறது. அப்படியே இப்புத்தகத்தை கருத்தூன்றி வாசிக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் மணவாளனாகிய கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டியான சபைக்குமுள்ள உறவினைக் காண இயலும், (மத்.9:15; யோவா.3:29; 2கொரி.11:1-4; எபே.5:22-33; வெளி.19:7;21:2,9;22:17). துதியும் ஆராதனையும், ஆழமான வேததியானமும் பரலோக மணவாளனாகிய கிறிஸ்துவுடன் நம்மை நெருக்கமாக இணைத்து, ஆவிக்குரிய உச்சத்துக்கு கொண்டுசெல்லும்; பரிசுத்தாவியானவர் இதில் நமக்கு உதவி செய்வார்.

ஞான அர்த்தமுள்ள பாடலாக உன்னதப்பாட்டு எழுதப்பட்டுள்ளது. ஆனால் இதில் எழுதப்பட்டுள்ள எல்லாவற்றுக்குமே எல்லைமீறிய ஞான அர்த்த வியாக்கியானம் தந்து, தவறான உபதேசங்களை உருவாக்கிவிடக்கூடாது. மணவாட்டியின் மார்பகங்கள் இரண்டும் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவற்றைக் குறிக்கும் என்பார் உண்டு! சிறிய சகோதரிக்கு ஸ்தனங்கள் இல்லையென்பதை ஆவிக்குரிய வளர்ச்சியின்மை என வியாக்கினிப்பாரும் உண்டு!!

உன்னதப்பாட்டில் வரும் தோட்டம் சபையையும், அதில் கேட்கும் காட்டுப்புறாவின் சத்தம் பரிசுத்தாவியானவரின் குரலையும் குறிக்கிறது என்பதெல்லாம் வரம்புமீறிய வியாக்கியானங்களாகும்; அவை இப்புத்தகம்தரும் அன்பு, திருமணம், பாலுறவு என்ற அடிப்படை செய்திகளைத் திசைத்திருப்பிவிடும்.

தேவன் ஏற்படுத்திய ஆண்பெண் அன்பு, திருமணம், பாலுறவு என்பனவற்றை உன்னதப்பாட்டாக எழுதிய சாலொமோன், கிறிஸ்துவுக்கு அடையாளமெனக் கொள்வோம். ஆனால் கிறிஸ்து சாலொமோனிலும் பெரியவராய் எப்பொழுதும் நமக்குத்தெரிய வேண்டும்; (மத்.12:42).

சாலொமோனின் ஞானத்தையும் (1இரா.4:29;5:12) மிஞ்சி நிற்பது கிறிஸ்துவின் ஞானம்; அவர் தேவஞானமாயிருக்கிறார், (1கொரி.1:24). அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது, (கொலோ.2:3).

சாலொமோன் பெருஞ்செல்வச் சீமானாயிருந்தான், (1இரா.10). ஆனால் கிறிஸ்துவோ அளவற்ற ஐசுவரியமுடையவர் (எபே.3:8; பிலி.4:19). சாலொமோன் தேவனுக்குக் கீழ்படியாமல் ஏராளம் பெண்களைக் கொண்டான். ஆனால் கிறிஸ்துவோ தமது தந்தையாகிய தேவனுக்குக் கீழ்படிந்து நித்திய காலத்துக்கும் கறையற்றதும் பிழையற்றதுமான சபையைத் தமக்கு மணவாட்டியாக நிலைநிறுத்திக் கொள்ளும்படியாக சிலுவையில் தியாக பலியாக மரித்தார்,(எபே.5:25-27; வெளி.21:2,9).

சாலொமோனுக்கும் சூலமித்திக்குமிடையேயுள்ள உறவு கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டியாகிய சபைக்கும் இடையேயுள்ள உறவினைக் காட்டுகிறது. கிறிஸ்து திரும்பவருவார். ராஜாவாக வருவார். மாட்டுத்தொழுவத்திலல்ல, மகிமையின் தூதரோடும் வருவார். தமது சபையாகிய மணவாட்டியை பரலோகத்துக்குக் கூட்டிச்செல்வார். அங்கு மணவாட்டி அவரது மனைவியாக மாறுவாள். சாலொமோன் ஒரு தேவாலயத்தைக் கட்டினான். ஆனால் அது பிற்காலத்தில் இடித்து எரித்து அழிக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்துவோ சபையென்னும் தமது ஆலயத்தைக் கட்டிவருகிறார் (மத்.16:18). இந்தச் சபை என்றென்றும் அவருக்கு மகிமையைக் கொண்டுவரும், (எபே.2:20-22).

மேற்கண்ட வரையறைகளில் உன்னதப்பாட்டு புத்தகத்தை வாசிப்பதும், வியாக்கியானம் செய்வதும், தியானிப்பதும் கிறிஸ்துவின் அன்பில் நம்மை மூழ்கச்செய்யும்! தேவனைக் கிட்டிச்சேரச் செய்யும்!! பயனுள்ள கிறிஸ்தவர்களாய் வளரச்செய்யும்!!!

# நற்செய்தி அறிவிக்கும் வகைகள்
## DIFFERENT APPROACHES OF EVANGELISM

சுவிசேஷம் அறிவிக்க வேண்டுமா? நான் எப்படி செய்வது? எனக்கு கூச்ச சுவாபம் ஆயிற்றே. பேச்சாற்றலும் எனக்கு இல்லை;' என்று கூறுபவரா நீங்கள்?

மத்தேயு 28:19,20 வசனங்களில் ஆண்டவர் இயேசு நமக்கு கூறியிருப்பது வெறும் ஆலோசனை அல்ல. மாறாக அனைத்து விசுவாசிகளுக்கும் அவர் அளித்துள்ள 'பிரதான கட்டளை' ஆகும். ஆகவே இதை தட்டிக் கழிக்க ஒரு சாக்குபோக்கும் நாம் சொல்லக்கூடாது.

புதிய ஏற்பாட்டில் பல வழிகளில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை பற்றி நாம் வாசிக்கிறோம். ஒவ்வொரு தனி நபருக்கும் நற்செய்தி அறிவிக்க தேவன் அருளியுள்ள வரங்களும், திறமைகளும் உண்டு. ஒவ்வொரு சபையிலும் இந்த விதமான நற்செய்தி அறிவிக்கும் தாலந்துகளை உடையவர்கள் இருப்பார்கள். அவைகள் கீழ்க்காணும் இந்த 6 வகைகளுள் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் அடங்கும்.

சபையின் அங்கத்தினர்கள் தங்கள் வரங்களையும், திறமைகளையும் ஒருங்கிணைத்து ஒருமனதுடன் செயல்பட்டால் சமுதாயத்தில் சிறப்பான விதத்தில் நற்செய்தி பணியாற்ற முடியும்.

நற்செய்தி அறிவிக்கும் 6 வகைகளை அல்லது அணுகுமுறைகளை குறித்து நாம் அறிந்து கொள்வோமா? இதில் உங்களுக்கு உகந்தது எதுவென தெரிவு செய்யுங்கள்.

### 1.நேரடியாக அறிவித்தல் (DIRECT APPROACH)

இந்த முறையில்தான் பேதுரு பெந்தெகொஸ்தே நாளன்று பெரும் திரளான மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதை நாம் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். (2:14-40) அவர் நேரடியாக ஆண்டவர் இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு, அவர் அருளும் இரட்சிப்பு ஆகியவற்றை அறிவிக்கிறார். இவ்விதமாக அறிவிக்கும் வரம் பெற்றவர்கள் உடனடியாக கிறிஸ்துவே உலக இரட்சகர் என்றும், அவர் நித்திய ஜீவனை அருளுகிறவர் என்றும் தைரியமாக அறிவிப்பார்கள். அது மட்டுமின்றி நற்செய்தி கேட்பவரின் பதிலையும் எதிர்கொள்ள ஆயத்தமாய் இருப்பார்கள். இவர்களின் அணுகுமுறை கிறிஸ்துவின் மீதான நோக்கம், விசுவாசம் அவசியம் என்று வலியுறுத்துவதாகவும், கேட்பவரின் கவனத்தை கிறிஸ்துவை நோக்கியே திருப்புவதாகவும் இருக்கும்.

### 2. அறிவுப்பூர்வமாக அறிவித்தல் (INTELLECTUAL/ APOLOGETIC APPROACH)

இந்த வகையை கையாளுவதில் சிறந்த உதாரணமாக அப்போஸ்தலர் பவுல் விளங்குகிறார். அத்தேனே பட்டணத்து தத்துவ ஞானிகளுக்கும், சீரிய சிந்தனையாளர்களுக்கும் பவுல் அறிவுப்பூர்வமாக, காரண காரியங்களுடன் கிறிஸ்துவின் நற்செய்தியை விளக்கி கூறுவதை நாம் அப்போஸ்தலர் 17:16-34 வசனங்களில் வாசிக்க முடியும். நற்செய்தியின் நம்பகத்தன்மையை, மேன்மையை நிரூபணங்களுடன் பவுல் தெளிவாக எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், ஆழமான வேத அறிவும், பிறமத வழிபாட்டு முறைகளை பற்றிய தெளிவான புரிதலும், சாந்தமாகவும், கோர்வையாகவும், பேசும் திறமையும் பெற்றவர்கள் மட்டுமே இம்முறையை கையாண்டு நற்செய்தி அறிவிக்க முடியும்.

### 3. சாட்சிகள் வாயிலாக அறிவித்தல் (TESTIMONIAL APPROACH)

இவ்வகையை பற்றி எளிமையாக விளக்கினால் இது "கதை சொல்லுதல்" (STORY-TELLING). கட்டுகதையல்ல. இயேசு நம் வாழ்வில் இடைபட்டு நம் வாழ்வை எப்படி மாற்றினார்; என்னென்ன அற்புதங்கள் செய்தார் என்ற உண்மை நிகழ்வை நாம் பிறருக்கு கூறுவதாகும். உதாரணமாக யோவான் 9ம் அதிகாரத்தில் பிறந்தது முதல் பார்வையற்றவராய் இருந்த மனிதன் இயேசுவால் அற்புதமாக பார்வை பெற்று கொள்கிறான். அவன் எப்படி பார்வை பெற்றான் என்று மற்றவர் அவனிடம் விசாரிக்கும் போது, "நான் குருடனாய் இருந்தேன்: இப்போது காண்கிறேன்" என்று இயேசு தனக்கு செய்த அற்புதத்தை விவரிக்கிறான் (யோவான் 9:25). இதே போன்று இயேசுவால் நாம் பெற்ற விடுதலையை, சுகத்தை, சமாதானத்தை, நன்மையை நாம் விசுவாசத்துடன் பிறரிடம் விவரிக்கும்போது அந்த மெய்சாட்சி அவர்களை தொடும். ஆண்டவர் இயேசுவை விசுவாசிக்கும்படி அவர்கள் உள்ளத்தை தூண்டும்.

### 4. உறவின் வாயிலாக அறிவித்தல் (RELATIONAL APPROACH)

இது நம் உறவினருக்கும், நாம் அன்புடன் பழகும் நண்பர்கள், அயல் வீட்டார் போன்றோருக்கும் நற்செய்தியை அறிவிப்பதாகும். இத்தகைய வரம் பெற்றோர் சக மனிதர்களை நேசிப்பவர்களாகவும், இனிமையாக பழகும் சுபாவம் உடையவர்களாகவும் காணப்படுவார். ஆண்டவராகிய இயேசு 'லேவி' (மத்தேயு) என்ற மனிதரை ஆயத்துறையில் கண்டு அழைத்தவுடன், அவர் எழுந்து இயேசுவின் பின் சென்றார். பின்பு அவர் தனது வீட்டில் இயேசுவுக்கு விருந்து ஏற்பாடு செய்து தந்து நண்பர்கள், அறிமுகமானவர் அனைவரையும் அந்த விருந்துக்கு அழைத்து இயேசுவை அவர்களும் அறிந்து கொள்ளும்படி செய்கிறார் என்று லூக்கா 5ம் அதிகாரத்தில் பார்க்கிறோம் (லூக்கா 5:27-29). இவ்வாறே நாமும் கூட நம் நண்பர்கள், உறவினருடன் உண்மையான அன்பு, அக்கறையுடன் நல்லுறவு கொண்டிருந்தால், ஏற்ற வேளையில் அவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்க முடியும்.

### 5. அழைப்பின் மூலமாக அறிவித்தல் (INVITATIONAL APPROACH)

இது நம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், உடன் வேலைசெய்வோர், அண்டை அயல் வீட்டாரை நம்முடன் ஆலயத்திற்கு வரும்படி வாஞ்சையுடன் அழைப்பதாகும். தனியாக வருவதை விட ஒரு அறிமுகமான நபருடன் கூட ஆலயத்திற்கு வருவதை எவரும் விரும்புவர். ஒரு வேத பாட வகுப்பிற்கோ, சிறப்பு ஜெபக்கூட்டம், சிறப்பு நற்செய்தி கூட்டம், விழாக்கால சிறப்பு நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு நம்முடன் கூட வரும்படி அழைப்பு விடுக்கலாம். நம்மால் அறிவிக்கப்படும் இடங்களுக்கு நமக்கு அறிமுகமானவர்களை அழைத்து சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை அவர்கள் கேட்க வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். புதிய விசுவாசியால் கூட இதை செய்ய முடியும் என்பதே இவ்வகையின் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக இயேசுவுக்கு அறிமுகமான பிலிப்பு மறுநிமிடமே நாத்தான்வேலிடம்,'வந்து பார்' என்று அழைத்தார் (யோவான் 1:46).

### 5. சேவையின் மூலமாக அறிவித்தல் (SERVICE/LIFE-BASED APPRAOCH)

இயல்பாகவே பிறருக்கு உதவும் 'குணம்' உடையவருக்கு இவ்வகை நற்செய்தி அறிவித்தல் ஏற்றதாகும். நற்செய்தி அறிவிக்க வார்த்தை எவ்வளவு முக்கியமோ, செயலும் அவ்வளவு முக்கியமாகும். நாம் கிறிஸ்துவை அறியாதோர் நடுவிலே

மிகவும் நல்நடக்கையுடன் வாழ வேண்டும். நம் வார்த்தையும், செயலும் ஒன்றாக இல்லையெனில் நாம் பகிரும் நற்செய்தியால் பலன் இருக்காது. இதைத்தான் பேதுரு தனது நிருபத்தில் வலியுறுத்துகிறார் (1 பேதுரு 2:12). நாம் போதிக்கும் இயேசுவின் அன்பை, இரக்கத்தை, நமது உதவிகரமான செயல்கள் மூலமாக வெளிப்படுத்தும் போது, இயேசுவின் நற்செய்திக்கு, நற்சாட்சிகளாய் விளங்குவோம்.

நீங்கள் அறிந்து கொண்ட இந்த நற்செய்தி அறிவிக்கும் முறைகளில் உங்களுக்கு உகந்ததை, ஜெபத்துடன் தெரிவுசெய்து, பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன், இன்றிலிருந்து செயல்படுத்த உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– ஆசிரியர்

---

## 8 Rules for Spiritual Growth

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை–625 016. போன் : 0452 4200664



# என் ஜீவிய நாட்களில்

## In My Life Time

**Rev. S. தாமரைச்செல்வன்**

இயக்குநர், வடமேற்கு மிஷனரி ஊழியங்கள்

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

எங்களுக்கு அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களே, வடமேற்கு மிஷன் இயக்கத்திலிருந்து வாழ்த்துக்களை கூறுகிறோம்.

நம்முடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு பின்நாட்களில் இஸ்ரவேல் என்று ஆசீர்வதிக்கப்பட்டதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நம் முற்பிதாக்கள் யாவரும் மிக மிக முக்கியமானவர்களே. ஒருவரை விட ஒருவர் குறைவானவர்கள் அல்ல. ஒவ்வொருவரும் தேவ திட்டத்தில் பிரகாசித்தவர்களே.

இந்த நாளில் ஈசாக்கு என்கிற முற்பிதாவையும் அவரது நாட்களில் (Life time) செய்தவைகளை தியானிக்கப்போகிறோம் (ஆதி.26:12-22).

ஈசாக்கு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு வரவர விருத்தியடைந்து மகா பெரியவனானான். இப்படிப்பட்ட நிலையில் **ஈசாக்கு செய்தது என்ன?**

1. தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டின துரவுகளும் மிகப் பிரயோஜனமாக இருந்தது. இந்நிலையில் ஏற்கனவே தோண்டப்பட்ட துரவுகளை தகப்பன் மரித்ததினாலும் ஈசாக்கின் வளர்ச்சியை பார்த்து பொறாமை கொண்டதினாலும் பெலிஸ்தியர் அவைகளை தூர்த்துப்போட்டு தரைமட்டாக்கினார்கள். தகப்பனின் நாட்களில் ஏராளமானவைகள் செய்யப்பட்டவைகள். தற்போது அவைகள் எல்லாம் அடைக்கப்பட்டு தூர்க்கப்பட்டு போய்விட்டதை ஈசாக்கு கண்டு, உணர்ந்து, மறுபடியும் அவைகளை தோண்டி, நீரூற்றுக்களை கண்டு, தகப்பன் ஏற்கனவே இட்ட பெயரை மறுபடியும் அதற்கு பேரிட்டு உயிர் கொடுத்தான்.

   நம் முன்னோடிகள், ஆரம்பித்து செய்த ஊழியங்கள் தற்போது தொடர்ந்து நடைபெறுகிறதா? ஒருவேளை பல்வேறு காரணங்களால் தற்போது அவைகள் தடைபட்டு அடைக்கப்பட்டிருந்தால் உங்கள் நாட்களில் அவைகளை மறுபடியும் தோண்டி உயிரோட்டத்தை வரப்பண்ணுவீர்களாக.

2. மறுபடியும் வேறொரு துரவைத்தோண்டி நீரூற்றைக் கண்டார்கள். வாக்குவாதம் ஏற்பட்டது. விட்டுக்கொடுத்தார்கள், ஆனால் அவர்கள் தோண்டுகிற வேலையை நிறுத்திக்கொள்ளாமல் வேறொரு துரவை வெட்டினார்கள். தோண்டினார்கள். நீரோட்டத்தை கண்டார்கள். நாமும் எக்காரணத்தை முன்னிட்டு தோண்டும் பணியை நிறுத்திக் கொள்ளாமல் மறுபடியும் மறுபடியும் தோண்டுவோமாக. புது புது நீரூற்றுக்களை காண்போம். அது நமக்கு மட்டுமல்ல நமக்குபின் வரும் சந்ததிக்கும் தலைமுறைக்கும் உதவியாய் இருக்குமே. இருக்கட்டும்.

   துரவு தோண்டுவது மிகமிக கடினமானது. ஆனால் முடிவு மகிமையே. தண்ணீரை, நீரூற்றை கண்டவுடன் மகிழ்ச்சியே. திரள் திரளான தலைமுறைக்கும் ஆசீர்வாதமானதே..

மலைகளில் காடுகளில் பள்ளங்களின் பாதையில்லா இடங்களில் புது பாதையை உருவாக்குவதைப் போன்றது கடினமானது. ஆனால் அதன் விளைவு பல தலைமுறைகளுக்கு உதவியானது.

மிஷன் ஊழியம் என்பதும் துரவு தோண்டுவதைப் போன்றதே.

- யாரும் இதுவரை போகாத இடத்திற்கு செல்வது
- யாரும் இதுவரை செய்யாத பணியை செய்வது
- ஒருமுறை கூட கேள்விப்படாத பார்க்காத அனுபவிக்காத நபர்களிடம் அறிவிக்க செல்வது

**1.ஜெபம் என்கிற துரவு:**

தூர்க்கப்பட்ட அடைக்கப்பட்ட ஜெபநிலைகளை மறுபடியும் தோண்டி விடுவோம். புது புது ஜெப நிலைகளை உருவாக்குவோம். அதன் நீரூற்றுக்களை காண்போம். ஜெபமே எல்லாவற்றையும் உண்டாக்குகிறதாய் இருக்கிறது. ஆரம்பத்தில் ஜெபித்ததைவிட அதிகமாக மறுபடி மறுபடியும் ஜெபிப்போமாக.

**2.மாத உதவி என்கிற துரவு :**

மிஷனரி குடும்பங்களுக்கு நீங்கள் அளிக்கும் மாத உதவிகள் அவர்கள் தங்கள் பணித்தளங்களில் தங்கி பணிபுரிய ஏதுவாய் இருக்கும். தூர்க்கப்பட்டு போக வேண்டாம். அடைக்கப்பட்டு விட வேண்டாம், மறுபடி மறுபடி தோண்டுபோது நம் நாட்களில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தேவராஜ்ய பணியாளர்களுக்கு மாத உதவிகளை மறுபடியும் மறுபடியும் உதவிகளை செய்து தாங்குவோம்.

**3.போய் பார்த்து விசாரிக்கும் துரவு:**

வருடத்திற்கு ஒருமுறையாவது மிஷனரிகளின் பணித்தளத்திற்கு சென்று அவர்களோடு சில நாட்கள் கூடவே தங்கியிருந்து, நல்லது கெட்டது என்று அவர்கள் ஊழிய அனுபவங்களில் இணைந்து விசாரித்து, ஆதரித்து, உற்சாகப்படுத்தி அவர்களுக்காக நாம் கரிசனையாயிருக்கிறோம் என்பதை காண்பிப்போமாக. இதுவரை செய்யாதவர்கள், ஏற்கனவே இதை செய்தவர்கள் நம் நாட்களில் மீண்டும் மீண்டும் முடிந்தவரை செய்வோமாக.

**4.வேதாகம மொழி பெயர்ப்பு என்கிற துரவு :**

வேதாகமம் மனுகுலத்திற்கு தேவன் அருளிய மகா பெரிய பொக்கிஷம். அது ஜீவன். அது வெளிச்சம். அது ஆதரவு. அது ஆதாரம்.

இன்று நாம் நம் தாய்மொழி தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பு வேதாகமத்தை பெற்று பல ஆயிரம் ஆசீர்வாதங்களை பெற்று அனுபவித்து வருகிறோம். தைரியம் அடைகிறோம், தெளிவடைகிறோம், உற்சாகமடைகிறோம், இன்னும் இந்த வேதாகமம் தங்கள் மொழியில் மொழிபெயர்க்கப்படாமல் கிடைக்காமல் இந்தியாவில் இருக்கிற சுமார் 1600-க்கு அதிகமான மொழி பேசும் மக்கள் இருக்கிறார்களே ...

ஒரு மிஷினரி சீகன்பால் ஐயர் தமிழ் மொழி பெயர்ப்புக்காக முயற்சி எடுக்காவிட்டால் இன்று நம் கையில் வேதாகம புத்தகம் இருந்திருக்காது. தமிழ் மொழி மக்கள் கோடிக்கணக்கானவர்களுக்கு இது கிடைத்திருக்காதே. ஒருவருடைய பாரம்

ஜெபம், பிரயாசங்கள், தியாகங்கள், கடின உழைப்பு, அயராத பணி அனைத்தும் நமக்கு வேதாகமம் என்கிற பொக்கிஷத்தை காணச் செய்துள்ளதே.

நாமும் நம் நாட்களில் இந்த மொழி பெயர்ப்பு என்கிற ஓர் புதிய துரவை தோண்டுவோமாக.

- ஒரு ஊழியத்திற்கு விடாமல் ஜெபிப்பது, மாத உதவி செய்வது பணித் தளத்திற்குபோய் உற்சாகப்படுத்துவது குறிப்பிட்ட எல்லை வரை கடந்து செல்ல உதவியாக இருக்கும்.

- இன்னும் இடம் வாங்கி ஆலயம் கட்டிக்கொடுப்பது அது நமக்கு பின் சில சந்ததிக்கும் உதவியாக இருக்கும்.

- ஆனால் இவைகள் எல்லாவற்றையும் விட மொழிபெயர்ப்பு பணி என்பது அந்த மொழி மக்கள் ஆயிரம் பதினாயிரம் தலைமுறைகளுக்கு அச்சாரமாய் மாறுமே. பெரிய முதலீடாய் இருக்குமே. பெரிய பொக்கிஷ வைப்பாய் இருக்குமே.

**மொழி பெயர்ப்பு பணி:**

ஏற்கனவே மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபடுகிறவர்கள் சொன்ன வார்த்தைகள்:

புதிய ஏற்பாடு முழுவதும் ஒரு மொழியில் மொழிபெயர்க்க சுமார் 5 முதல் 7 ஆண்டுகள் தேவைப்படுகிறது. ஒரு முழு வசனம் மொழிபெயர்க்க குறைந்தது ரூபாய் 300 செலவு செய்யப்பட வேண்டியதாய் இருக்கிறது. இவைகள் நம் நாட்களில் (Life time) பெரிய தாக்கத்தை (சொத்தை) பின்வரும். தலைமுறைகளுக்கு வைத்துப் போக நீங்கள் ஏதாவது முயற்சி எடுப்பீர்களா?. புதிய துரவுகளை தோண்டுவீர்களா ?

நாம் எல்லோரும் சேர்ந்து செயல்பட்டால் சில வருடத்தில் 3 முதல் 5 மொழிகளில் வேதாகமத்தை (ஒரு பகுதியாகிலும்) மொழிபெயர்க்க முடியும்.

1. ஈசாக்கு தன் நாட்களில் (Life time) புதிய துரவுகளையும் தோண்டி பின்வரும் தலை முறைகளுக்கு நீரூற்றுகளை வைத்து போனாரே.
2. எலியா தன் நாட்களில் தகர்க்கப்பட்ட பலிபீடத்தை செப்பனிட்டு கர்த்தருடைய நாமத்திற்கு என்று ஒரு பலிபீடத்தை கட்டி செயல்பட்டபோது வானத்திலிருந்து அக்கினி இறங்கியதே; கர்த்தரே தேவன் என்று அறியப்பட்டாரே! (1ராஜா.18:21-39).
3. (அப்.13:36) தாவீது தன் காலத்திலேயே (Life time) தேவனுடைய சித்தத்தின் படி அவருக்கு ஊழியம் செய்தபின்பு நித்திரையடைந்து பிதாக்களோடு சேர்க்கப்பட்டான்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளைகளே, அன்பான ஊழியரே!

நம் ஜீவிய நாட்களிலே நாம் உயிரோடு இருக்கும் நாட்களுக்குள்ளே (Life time) தேவ நாம மகிமைக்காக.... பின்வரும் தலைமுறைக்காக.... நல்ல அடிச்சுவடுகளை, அழியா சொத்துக்களை வைத்துப்போக சாதிக்க முன்வருவோம்.

**உங்களுக்கு வழிகாட்ட நாங்கள் இருக்கிறோம்.**

Rev.தாமரை செல்வன்
94439 77272

Rev.லாரன்ஸ் மனோஜ்குமார்
94434 52954

Rev.தேவதாசன் கலையரசன்
94440 72443



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# உயர்த்தப்பட்ட யோசுவா

Rev.N. ஜான்சன்

பொருளாளர், ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

ஒருநாள் கர்த்தர் மோசேயை நோக்கி, நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, கானான் தேசத்தை உன் கண்களால் பார்த்துக்கொள். நீ மரிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்றார்.

அதற்கு மோசே, ஆண்டவரே, எனக்குப் பின் இஸ்ரவேல் மக்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மாறிவிடாதபடி, ஒரு தலைவனை அவர்களுக்காக ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தார். அதன்படி கர்த்தர் உனக்கு அடுத்தக் கட்டத்தலைவனாக யோசுவாவை ஏற்படுத்து என்று பரிந்துரைக்கிறார்.

உடனே மோசே, யோசுவா என்ற வாலிபனை ஆளை அனுப்பி வரவழைக்கிறார். யோசுவாவுக்குள் ஒரே குழப்பம். தலைவர் என்னை ஏன் அழைத்திருக்கிறார். நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா என்று பலவித சிந்தனைகளோடு, நடுக்கத்துடனே மோசேக்கு முன் வந்து நின்றான்.

அப்பொழுது யாரும் எதிர்பார்க்காத ஒரு சம்பவம் நடந்தது. மோசே யோசுவாவை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவன்மேல் கைகளை வைத்து, எனக்கு அடுத்த தலைவனாக யோசுவாவை கர்த்தர் தேர்ந்தெடுத்துள்ளார் என்று அறிவித்தார் (எண்ணாகமம் 27:18-20).

ஒரு சாதாரண வேலைக்காரனாக இருந்த யோசுவா இஸ்ரவேலின் அடுத்தக்கட்ட தலைவனாக உயரக்காரணம் அவரிடம் காணப்பட்ட ஆவிக்குரிய நற்குணங்களே. யோசுவாவின் நற்குணங்களில் ஐந்தை நாம் இப்போது தியானிக்கலாம்.

### 1. தேவனை இரட்சகராகக்கொண்ட யோசுவா

தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே, நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருந்தான் (எண்ணாகமம் 13 :16) என்று வேதம் சொல்கிறது.

ஓசேயா என்றால் இரட்சிப்பு என்று அர்த்தம். ஆனால் அதற்குப் பதில் யோசுவா என்று மோசே அவருக்குப் பெயரிட்டார். இதற்கு யேகோவா என் இரட்சகர் என்று பொருள்.

இஸ்ரவேலின் இரட்சகராகிய கர்த்தர் ஓசேயாவோடு இருந்து, இஸ்ரவேலைக் காப்பார் என்ற அர்த்தத்தில் மோசே இந்தப் பெயரை சூட்டினார். இந்த யோசுவா என்ற பெயரில் இருந்து தான் இயேசு (எபிரேயத்தில் யெஷீவா) என்ற பெயர் வந்தது. இயேசுவை உங்கள் வாழ்வின் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, யோசுவாவை அவர் உயர்த்தியதுபோல, உங்களையும் இம்மையிலும் மறுமையிலும் உயர்த்துவார்

### 2. ஆவியைப் பெற்ற யோசுவா

மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான், இஸ்ரவேல்

புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள் (உபாகமம் 34:9). மூத்த ஊழியனாகிய மோசே இளம் ஊழியனாகிய யோசுவாவின் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவியானவர் யோசுவாவை ஞானத்தின் ஆவியால் நிறைத்தார்.

யோசுவாவின் ஞானத்தைக்கண்ட மக்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொற்படி நடக்கத் துவங்கினார்கள். இன்று நாம் ஒவ்வொருவரும், விசேஷமாக நம் சபைகளில் உள்ள புருஷர்கள் யாவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களாக, விசேஷ ஞானம் உடையவர்களாக காணப்பட வேண்டும். தேவஞானம் நம்மிடத்தில் வெளிப்படும்போது, அதன் மூலமாக அநேகரை கர்த்தருக்கு நேராக நாம் வழிநடத்த முடியும்.

## 3. உத்தமமாய் ஊழியனை பின்பற்றிய யோசுவா

உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர (எண்ணாகமம் 32:11) ஒருவரும் வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்குள் பிரவேசிப்பதில்லை என்று மோசே சொல்வதை நாம் காண்கிறோம்.

இஸ்ரவேலின் மூப்பர்களில் பெரும்பான்மையானோர் மோசேக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் ஜனங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரப்பி மக்களை மனம் மடியப்பண்ணினார்கள். ஆனால் காலேபும், யோசுவாவும் அவர்கள் மத்தியில் நம்பிக்கையின் வார்த்தைகளைப் பேசினார்கள். உத்தமத்தோடு மோசேயைப் பின்பற்றினார்கள்.

கர்த்தர் உங்களுக்குக் கொடுத்துள்ள ஸ்தல சபையோடு எப்போதும் இணைந்திருக்க வேண்டும். உங்களுக்கு பல ஊழியர்களைத் தெரிந்திருக்கலாம். ஆனால் உங்கள் சபை மேய்ப்பன் ஒருவரே உங்கள் ஆவிக்குரிய தகப்பன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. தேவன் உங்களுக்கு தந்துள்ள ஊழியரின் தரிசனத்தையும், திட்டங்களையும் உத்தமமாய் பின்பற்றி நடப்பீர்கள் என்றால், யோசுவாவை உயர்த்திய தேவன் உங்களையும் உயர்த்துவார்.

## 4. பணிவிடை ஊழியம் செய்த யோசுவா

ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார். பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான். நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தைவிட்டுப் பிரியாதிருந்தான் (யாத்திராகமம் 33:11).

யோசுவா பணிவிடை ஊழியத்தைசெய்த ஒரு சாதாரண வாலிபனாக இருந்தான். எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்த ஒரு எலிசாவைப்போல, மோசே சொன்ன யாவற்றையும் செய்யும் ஒரு உதவிக்காரனாக யோசுவா தன் வாழ்வைத் துவக்கினார். இப்போதோ, சமஸ்த இஸ்ரவேலை ஆளும் தலைவனாக கர்த்தரால் உயர்த்தப்பட்டார்.

தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக்கா 14:11) என்று ஆண்டவர் இயேசு உரைத்துள்ளதுபோல, நம்மைத் தாழ்த்தி சபையில் உள்ள

பணிவிடை ஊழியங்களை நாம் செய்யும்போது, அதைக் காண்கின்ற கர்த்தர் நம்மை நல்ல நிலையில் (1 தீமோத்தேயு 3:13) உயர்த்தி வைப்பார் என்பதில் சந்தேகமில்லை.

**5. யுத்த வீரனாய் வாழ்ந்த யோசுவா**

அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு. நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான் (யாத்திராகமம் 17:9). யோசுவா 13 யுத்தங்களை நடத்தி, 31 இராஜாக்களை ஜெயித்து, கானான் தேசத்தைப் பிடித்து, 12 கோத்திரங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்த மாபெரும் யுத்தவீரனாகத் திகழ்ந்தார்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நல்லபோராட்டம் (2தீமோத்தேயு 4:7) என்று பவுல் கூறுகிறார். இது ஒரு மல்யுத்தத்திற்கு சமம். மல்யுத்தத்தில் வெற்றிபெறும்போது கிரீடம் பெறுவது நிச்சயம். அதைப்போல, விசுவாச வாழ்க்கையில் நாம் போராடி வெற்றிக்கொள்ளும்போது கர்த்தர் அவர் வருகையில் நமக்கு நீதியின் கிரீடத்தைச்சூட்டுவார். எனவே வாழ்வில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும், நாம் கர்த்தருக்காக தொடர்ந்து ஓட நம்மை அர்ப்பணிப்போம்.

யோசுவாவிடம் காணப்பட்ட மேற்கண்ட நற்குணங்களை நாம் வளர்த்துக்கொள்வோம். ஒரு சாதாரண வேலைக்காரனாக இருந்த யோசுவாவை, இஸ்ரவேலின் தலைவனாக உயர்த்திய கர்த்தர், நிச்சயம் உங்களையும் ஏற்றவேளையில் ஆசீர்வதித்து உயர்த்துவார். ஆமென்!

---


**தாய்மார்கள் தினம்**

மே 12, ஞாயிறு




**தகப்பனார்கள் தினம்**

ஜீன் 16,ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்**




**பெந்தெகொஸ்தே நாள்**

மே 19, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்**



# இயேசு நின்றார்!

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள்!

பாவத்திலும், சாபத்திலும், வியாதியிலும் வாழ்ந்து கொண்டிருக்கிற மனுக்குலத்தை இரட்சிக்கும்படி தம்முடைய ஜீவனையே தந்து உயிர்த்தெழுந்த இயேசுவானவர் அநேக இடங்களிலே நின்று தம்முடைய கிரியைகளை நடப்பித்தார். தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார், அற்புதங்களை செய்தார், நீதியை நடப்பித்தார், பிதாவுக்கு உண்மையாய் தம்மை ஒப்புக்கொடுத்தார். வேதத்தில் அவர் நின்று செய்த கிரியைகள் ஏராளம் எழுதப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை தியானிப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

### 1.உண்மையுள்ள ஸ்தேவானை வரவேற்கும் விதமாகவும், கனம்பண்ணும் விதமாகவும் எழுந்து நின்ற கர்த்தர்

அப்போஸ்தலர் 7:55 "அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு" பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவனாய், பந்திவிசாரிக்கும் ஊழியத்திற்கு சீஷர்களால் நியமிக்கப்பட்ட ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் தேவனுக்காக வைராக்கியமுள்ளவனுமாய் காணப்பட்டான். அவன் தேவனுக்காக ஊழியம் செய்து வந்த நாட்களில் அவனுடைய ஊழியத்திற்கு விரோதமாய் சிலர் எழும்பி அவனை ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தியபொழுது அவன் அவர்களுக்கு வேதத்தின் மகத்துவங்களை வெளிப்படுத்திக் காண்பித்தான். ஆனாலும் அவர்கள் அவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் மூர்க்கமடைந்து தங்கள் பற்களைக் கடித்து அவனை நகரத்திற்கு புறம்பே தள்ளி கல்லெறிந்தார்கள். ஸ்தேவான் அந்த சமயத்தில் பரலோகத்திற்கு நேராக தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் வானம் திறந்திருக்கிறதையும் அங்கே இயேசுவானவர் பிதாவின் வலது பாரிசத்தில் நிற்கிறதையும் கண்டு தம்முடைய ஜீவனைவிட்டான். உண்மையுள்ள ஸ்தேவானை வரவேற்கும் விதமாகவும், கனம்பண்ணும் விதமாகவும் எழுந்து நின்ற கர்த்தர் நாம் கர்த்தருக்காக உண்மையாக வாழும்போதும் தேவனுடைய சித்தம் செய்யும்போதும் நமக்காகவும் நம்மோடும் நின்று நம்மை கனப்படுத்தி ஆசீர்வதிப்பார்.

### 2.ஆலயத்துக்கும், வேதத்திற்கும் அடுத்த காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் விதமாக எழுந்து நின்ற கர்த்தர்

லூக்கா 4:16 "தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்". இயேசு ஊழியத்தினிமித்தம் அநேக ஊர்களிலும், கிராமங்களிலும் சுற்றித்திரிந்தார். அவர் நமக்கு உதாரணமாய் நமக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து விட்டுப்போனவர். நாம் எப்படி வாழவேண்டும் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கற்றுத்தந்தவர். அவர் வளர்ந்த ஊரிலே தமது வழக்கத்தின்படியே வேதத்தை வாசிக்க எழுந்து நின்றார் என்று எழுதியிருக்கிறது.

இன்றைக்கு ஆலயத்தில் ஏதாவது ஒரு காரியத்தை செய்வதற்கு பொதுவாக அழைப்பு விடுக்கும்போது நம்மில் எத்தனைபேர் வாஞ்சையோடு எழுந்து நிற்போம் அல்லது முந்திக்கொள்வோம். நீங்கள் முந்திக்கொண்டால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆண்டவருடைய காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பவர். ஒருவேளை நீங்கள் இதுவரை தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காதவராக இருந்தால், இன்று உங்களை ஒப்புக்கொடுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்

### 3.சோர்ந்து போகாமல் விசுவாசத்தோடு அவரை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்காக நிற்கும் கர்த்தர்

மாற்கு 10:49 "இயேசு நின்று, அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்". இயேசு எரிகோவிலிருந்து புறப்படுகிறபோது அங்கே வழியருகே பர்திமேயு என்னும் குருடன் அமர்ந்து பிச்சைக்கேட்டுக் கொண்டிருந்தான் அவன் இயேசு அவ்வழியாய் வருகிறாறென்று கேள்விப்பட்டு, இயேசுவை நோக்கி கூப்பிட்டான் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். ஆனால் அவனைச் சுற்றி நின்றவர்கள் அவன் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். ஆனால், அவன் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் விசுவாசத்தோடு இயேசுவை நோக்கிக் கூப்பிட்டான். இயேசுவை நோக்கி கூப்பிட்டால் அவர் நம்மை தொட்டு சுகமாக்கினால், நாம் நிச்சயம் சுகமாகிவிடுவோம் என்ற அசையாத உறுதியான விசுவாசத்தால் அவரை முழுமையாக நம்பி மிகத் தீவிரமாக சத்தமிட்டுக்கூப்பிட்டான். இயேசு அவனுடைய விசுவாசத்தின் உறுதியைக் கண்டு அவனுக்கு பார்வையளித்தார். சுகமடைந்த இந்த பர்திமேயுவைப்போல நாமும் கர்த்தரிடத்தில் உறுதியாக விசுவாசத்தோடு விடாப்பிடியாக ஜெபித்தால் அற்புதத்தை பெறுவது நிச்சயம்.

### 4.சுவிசேஷத்தை அறிவித்து மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஆத்தும தாகத்தை தீர்க்கும்படி நின்ற கர்த்தர்

யோவான் 7:37 "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்". இயேசு பண்டிகை நடந்த எருசலேமுக்குச் சென்றார். பண்டிகைகளும் மாதப்பிறப்புகளும் அவரை மகிமைப்படுத்த வரப்போகிற காரியங்களுக்கு நிழலாட்டமாக கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பண்டிகையின் கடைசி நாளில் திரளான ஜனங்களைக் கண்டு அவர்களின் ஆத்தும தாகத்தை தீர்க்க விரும்பினார். அதினால் அவர் ஜனங்களை நோக்கி கூப்பிட்டார். இன்று அநேக ஜனங்கள் அவரை அறியாமல் நிம்மதியில்லாமல் தங்கள் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் இல்லாமல் மரித்த நிலைமையிலே எதை எதையோ தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆத்துமாக்களுக்கு ஏற்பட்டிருக்கிற தாகத்தை இயேசு ஒருவரால் மாத்திரமே தீர்க்க முடியும். அவரிடத்தில் பொங்கி வரும் ஜீவநதியிருக்கிறது. அந்த ஜீவ நதியால், வேத வசனத்தால், பரிசுத்த ஆவியால் மனிதர்களுக்கு ஏற்பட்டியிருக்கிற ஆத்தும தாகம் தீரும்.

### 5. தேசாதிபதிக்கு முன்பாக நின்ற கர்த்தர்

மத்தேயு 27:11 "இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்; தேசாதிபதி அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்''. இயேசு தேசாதிபதிகளும் மேலானவர் அதிபதிகளுக்கெல்லாம் அதிபதி ராஜாதி ராஜா தேவாதி தேவன் கர்த்தாதி கர்த்தர் அண்ட வெளியை நாம் நோக்கிப்பார்த்தால் பூமியானது சிறிய புள்ளியில் அந்த அண்ட வெளியை சூரிய சந்திர நட்சத்திரங்களை உண்டாக்கி ஆளுகை செய்கிற சர்வ வல்ல தேவன் ஒரு சாதாரண மனிதனுக்கு முன்பாக நியாயாசனத்திற்கு முன்பாக பொய்யாக

குற்றம் சாட்டப்பட்டு நின்றார். வேதம் சொல்லுகிறது அவர் பிதாவின் சித்தம் செய்யும்படி மரணபரியந்தம் கீழ்படிந்தவராகி தம்மை தாமே தாழ்த்தி வெறுமையாக்கினார். இன்று நாம் எந்த தகுதியுமில்லாதவர்களாயிருந்தாலும் நமக்குள் எத்தனையோ பெருமை கீழ்படியாமை போன்ற காரியங்கள் இருக்கிறது. நமக்காக இறங்கி வந்து தம்மை தாமே வெறுமையாக்கி நமக்காக ஜீவனைக் கொடுத்த இயேசுவை மனதிலே நிறுத்தி நமக்குள் இருக்கிற பெருமைகளை கீழ்படியாமைகளை நம்மை விட்டு அகற்றுவோம்.

### 6. சமாதானத்தை கொடுக்கும்படி நடுவே நின்ற கர்த்தர்

லூக்கா 24:36 “இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்”. இயேசு சிலுவையில் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பிற்பாடு சீஷர்கள் மிகுந்த கலக்கத்தோடு அறையில் அடைபட்டவர்களாய் பயத்தோடு இருந்தார்கள். நான் உயிர்த்தெழுவேன் என்று தாம் மரிக்கும் முன்பாக சீஷர்களுக்குச் சொன்ன சத்தியத்தை சீஷர்கள் முழு மனதோடு விசுவாசிக்கவில்லை. ஆகையால் அவரைக்குறித்து அவரை கல்லறையில் தரிசித்த தூதர்கள் கண்ட சாட்சியை ஸ்திரீகள் சொன்ன பிற்பாடும் அவர்களால் முழுமையாக விசுவாசிக்க முடியவில்லை அவர்கள் சந்தேகப்பட்டார்கள். மேலும் எம்மாவூர் சீஷர்களுக்கு இயேசு தரிசனம் தந்த சாட்சியை சொன்னபிற்பாடும் அவர்களுக்கு கலக்கம் தீரவில்லை ஆகவே உயிர்த்தெழுந்த இயேசு அவர்கள் கலக்கத்தையும், சந்தேகத்தையும் தீர்க்கும்படியாக அவர்கள் நடுவே நின்று அவர்களுக்கு சமாதானம் கூறினார். அந்த இயேசு இன்றும் உயிரோடு இருக்கிறார் உங்கள் நடுவே இருக்கிறார். இந்த கடைசி நாட்களிலே வரக்கூடிய ஆபத்துகள் சோதனைகளில் பயத்தோடு வேதனையோடு இருக்கிற அவருடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு அவர் சமாதானத்தை கொடுப்பார், பாதுகாப்பார், ஆசீர்வதிப்பார். ஆமென்.

---

## சபையைக் குறித்து எனது உறுதிமொழி



1. சபைக்கும் எனக்கும் உள்ள தொடர்புதான் தேவன் எனக்குத் தரும் ஆசீர்வாதம்.
2. நான் என் பிள்ளைகளுக்குத் தரும் சொத்து, அவர்களுக்கும் என் சபைக்கும் உள்ள தொடர்பு ஆகும்.
3. தேவன் என் மேல் அன்பாய் இருப்பதையும், நான் தேவன் மேல் அன்பாய் இருக்கிறேன் என்பதையும் நான் சபைக்குத் தவறாமல் வருவதன் மூலம் நிரூபிக்க முடியும்.
4. என்னில் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி காணப்படுகிறது என்பதை நான் சபையில் ஆராதிப்பதே நிரூபிக்கும்.
5. எனக்கு தேவன் மீது தாகம் இருக்கிறது என்பது, நான் சபையில் செய்யும் ஊழியம் மூலம் நிரூபிக்கப்படுகிறது.
6. பரிசுத்த ஜீவியத்துக்கு ஒரு ஆதாரம் சபை.
7. சாத்தான் என்னோடு அதிகமாய் போராடுவதன் பிரதான நோக்கம் என்னை சபையிலிருந்து பிரிப்பதே. அதைமீறி நான் சபையில் நாட்டப்படுவதே ஆசீர்வாதம்.
8. நான் சபையோடு ஐக்கியப்படுவதே தேவனின் பிரதான நோக்கம்.
9. இந்த உலகத்தின் பாடுகளை, நான் சபையில் வந்து ஆராதிப்பதால் பெறும் பெலத்தினாலே ஜெயிப்பேன்.
10. எந்த சூழ்நிலையிலும் நான் சபையை விட்டு விலகமாட்டேன்.
11. என் சுபாவங்களில் மாற்றம், தேவனுடைய சபைக்கு வந்து போவதினாலேயே ஆகும்.




Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்! தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த நான்கு மாதங்களும் நம் வாழ்வில் நன்மைகளைச் செய்து, நம்மை பிறருக்கு வெளிச்சம் காண்பித்து பிரகாசிக்கிறவர்களாய் ஏற்படுத்தி வைத்திருக்கிற தேவனுக்கே மகிமையுண்டாவதாக. தொடர்ந்து வரும் காலங்களிலும் கர்த்தர் நம்மையும் நம் வாலிபர் இயக்கத்தையும் கொண்டு, தம் நாமம் மகிமைக்கென்று பெரிய காரியங்களைச் செய்வாராக.

“பிரகாசிக்கும் விளக்கு” என்கிற தலைப்பில் இவ்வருடம் நாம் தியானித்து, அர்ப்பணித்து, செயல்பட்டு வருகிறோம். அதன் அடிப்படையில் ஒரு எரிகின்ற விளக்கு தான் பிரகாசிக்கிற ஒளியை மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளதாக காணப்பட, அது தன் விளக்குத் தண்டின் அடிப்பகுதியில் ஸ்திரமாக நிற்கத்தக்க சமமானதாகவும், உறுதியுள்ளதாகவும் காணப்பட வேண்டும். தான் நிற்கும் நிலையில் தடுமாறினாலோ அல்லது நிற்கக்கூடாமல் விழுந்தாலோ ஆசீர்வாதமாக இருக்க வேண்டிய விளக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நம் வாழ்விலும் நாம் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருப்பதற்கு,

1. கர்த்தர் நம்மை ஏற்படுத்தின ஸ்தானத்தில் இருப்பது முக்கியம்
2. அடிப்படை சத்தியங்களில் உறுதியாய் இருப்பது முக்கியம்

இவ்விரண்டும் சரியாய் இருந்தால் வெளிச்சம் கொஞ்சமோ, அதிகமோ பிறருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாமல் சரியாய் பிரகாசித்து ஆசீர்வாதமாக இருப்போம்.

## ஸ்தானம்

தேவன் நம் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு ஸ்தானத்தில் ஏற்படுத்தி வைக்கிறார். அந்த ஸ்தானத்தை நாம் இழந்து போகாதவர்களாய் அதில் உறுதியாய் தரித்து நிற்பது மிகவும் அவசியம். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு அப்பெரிய ஸ்தானத்திற்கு முடிசூட்டப்பட்டு சிங்காசனத்தில் அமர்த்தி வைக்கப்பட்டார். தாவீது கோலியாத்தை கொன்றபோது ஸ்திரீகள் பாடின பாடல் சவுல் ராஜாவின் கவனத்தை ஈர்க்க, தன் ஸ்தானத்திலிருந்து தேசத்தை ஆண்டு பிரகாசிக்க வேண்டிய சவுல் ஸ்தானத்திலிருந்து இறங்கி, தாவீதை கொல்லுவதை தன் வாழ்வின் முழு இலட்சியமாய் எடுத்துக்கொண்டு, தடுமாறி விழுந்துபோன ஒரு விளக்கைப் போல தானும் பிரகாசியாமல் தன் சந்ததிக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி பிரயோஜனமில்லாமல் போனார்.

1 பேதுரு 5:6—ன்படி "...ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்". கர்த்தர் நம்மை உயர்த்தும் வரை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானத்திலிருந்து பிரகாசிப்பதுதான் உத்தமம். நாம் நாமாக நம்மை உயர்த்த நினைத்தால் அல்லது தேவன் தந்த ஸ்தானத்திலிருந்து விலகினால் நாம் அதிக பாதிப்பை ஏற்படுத்தி விடுவோம்.

எரிகின்ற விளக்கு எவ்வளவு பிரகாசமாய் இருந்தாலும் தன் நிலையில் இல்லாதபடி தடுமாறி விழுந்தால் பெரும் பாதிப்பு. அதேபோல் நமக்கு எவ்வளவு தாலந்து, திறமைகள் இருந்தாலும் தேவன் நம்மை அவருடைய சரீரமாகிய சபையில் வைத்திருக்கிற ஸ்தானத்தில் தாழ்மையாய் நிலைத்திருந்தால் நம் பிரகாசம் பிறருக்கு பிரயோஜனமாய் இருக்கும்.

## சத்தியம்

2 நாளாகமம் 24ஆம் அதிகாரத்தில் யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்தான். அவன் நாற்பது வருடம் எருசலேமில் அரசாண்டான். தன் ஆட்சிக் காலத்தில் ஆசாரியனாகிய யோய்தா உயிரோடிருக்கும் வரை சத்தியத்தை விட்டு விலகாதவனாய் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானவைகளைச் செய்து, கர்த்தரின் ஆலயத்தை பழுதுபார்த்து, கர்த்தரின் ஆலயத்திற்குத் தேவையான பணங்களை சவதரித்து, சர்வாங்க தகனபலிகளை ஆலயத்தில் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தினான். இந்தக் காலம் பிரகாசிக்கும் காலமாய் இருந்தது. ஆனால் ஆசாரியனாகிய யோய்தா மரணமடைந்த பின்பு யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்தை விட்டுவிட்டு, தோப்பு விக்கிரகங்களுக்கும், சிலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவனுக்குப் பிரியமில்லாதவனாய் மாறினான். ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரன் சகரியா யோவாசை கண்டித்த போது அவனை ஆலயபிரகாரத்தில் கல்லெறிந்து கொலையும் செய்தான். சத்தியத்தை விட்டு யோவாஸ் விலகின பிற்பாடு விழுந்துபோன விளக்குப்போல பிரகாசியாமல் அவன் நிமித்தம் தேசத்தின் பிரபுக்கள் சீரியாவின் சேனைகளால் அழிக்கப்பட்டு, உடைமைகள் எல்லாம் கொள்ளையிடப்பட்டு பெரும்பாதிப்பு ஏற்பட்டது, மாத்திரமல்லாமல் யோவாசுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணி அவன் படுக்கையிலேயே அவனைக் கொன்றுபோட்டார்கள். ராஜாக்களின் கல்லறையில் அவன் சரீரம் வைக்கப்படவுமில்லை.



சத்தியத்தை விட்டு விலகும் போது நாம் தடுமாறுகிறோம். பிரகாசிக்க வேண்டிய நம் வாழ்வு பிறரை பாதிப்புக்குள்ளாக ஆக்குகிறதாய் மாறுகிறது. நாமும் விழுந்துபோவோம். சத்தியம் உறுதியானது, மாறாதது, நிலையானது. போக்கு (Trend) மாற்றத்துக்குரியது, மாறிக்கொண்டே இருக்கும். காலத்துக்கு தகுந்தவாறு Trend மாறும். நாம் அதைப் பின்பற்றினால் உறுதியாய் நிற்க முடியாமல் விழுந்து போவோம். இந்நாட்களில் நாம் நம்முடைய அடிப்படையான ஸ்தானத்தையும் சத்தியத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள கர்த்தர் தாமே கிருபை தருவாராக. ஆமென்



# பரிசுத்த வேதாகமம் ஒரு வித்தியாசமான புத்தகம்

**(Holy Bible - A Different Book)**


**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது (சங்கீதம் 12:6).

''உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்" (சங்கீதம் 138:2).

**1. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியர்**

பரிசுத்த வேதாகமமே இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியரான பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகமாகும்.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது...." (2 தீமோ.3:16).

**2. எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட காலம்**

பரிசுத்த வேதாகமம் எழுதுவதற்கு சுமார் 1600 ஆண்டு காலமானது.

**3. வித்தியாசமான ஆசிரியர்கள்**

பரிசுத்த வேதாகமமே வித்தியாசமான கீழ்க்கண்ட ஆசிரியர்களைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகம்.

சாலமோன் - ராஜா
பவுல் - யூத ரபி
யோசுவா - ராணுவ தளபதி
நெகேமியா - பானபாத்திரக்காரன்
ஆமோஸ் - மேய்ப்பர்
பேதுரு - மீனவர்
லூக்கா - மருத்துவர்

**4. வித்தியாசமான கண்டங்கள், மொழிகள்**

பரிசுத்த வேதாகமம் மட்டுமே ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா போன்ற 3 கண்டங்களிலிருந்து எழுதப்பட்டது. எபிரேயு, கிரேக்கு, அரமேயு ஆகிய 3 பாஷைகளில் எழுதப்பட்டது.

**5. முரண்பாடற்றது**

பரிசுத்த வேதாகமம் வித்தியாசமான இடங்கள், நபர்கள், காலங்களில் சூழ்நிலைகளில் இருந்து எழுதப்பட்டாலும் ஒன்றுக்கொண்டு முரண்பாடு இல்லை.

**6. அதிக விற்பனை**

பரிசுத்த வேதாகமமே உலகில் அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிற புத்தகமாகும். பைபிளை சுமார் 3,900 மில்லியன் பேர் வாசிக்கிறார்கள் (கிட்டத்தட்ட 400 கோடி பேர்) கீழ்கண்ட செய்தி தினமலர் 29.06.2012ல் வெளிவந்தது.

உலக அளவில் எண்ணிக்கையிலும் விற்பனையிலும் முதல் 10 இடங்களை பிடித்த புத்தகங்கள்

1. பைபிள்
2. மா சே துங்கின் பொன்மொழிகள்
3. ஹாரி பாட்டர்
4. தி லார்டு ஆப் தி ரிங்ஸ்
5. தி ஆல்கெமிஸ்டு
6. தி டாவின்சி கோட்

7. தி டுவிலைட் 8. கான் வித் தி விண்டு

9. திங்க் அண்ட க்ரோ ரிச் 10. தி டயரி ஆப் அன்னி ப்ரேங்க்

**7. முதல் அச்சடிப்பு**

அச்சு எந்திரத்தை கண்டுபிடித்த கூட்டன் பர்க் என்பவர் முதன் முதலில் அச்சிட்ட புத்தகம் லத்தின் வல்கேட் என்ற பரிசுத்த வேதாகமமே. பரிசுத்த வேதாகமம் மட்டுமே இன்று வரை தொடர்ந்து அச்சிட்டுக்கொண்டே இருக்கும் புத்தகமாகும் (Never goes out of print).

**8.அதிக மொழிபெயர்ப்பு**

பரிசுத்த வேதாகமமே உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

உலகில் பிரபலமான.... ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற பத்திரிக்கை 21 மொழிகளில் 70 நாடுகளில் விற்பனையாகிறது.

கின்னஸ் புத்தகம் 23 மொழிகளில் கிடைக்கிறது.

ஆனால் பரிசுத்த வேதாகமமோ.....

**உலகில்...** 531 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2883 மொழிகளில் வேதாகமத்தில் சில பகுதிகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

**இந்தியாவில்...** 65 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

204 மொழிகளில் வேதாகமத்தில் சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**9. அதிக கையெழுத்துப் பிரதி**

பரிசுத்த வேதாகமமே அதிக கையெழுத்து பிரதிகளைக் கொண்டிருக்கும் புத்தகமாகும். புதிய ஏற்பாட்டிற்கு மாத்திரம் 24,633 கையெழுத்து பிரதிகள் உள்ளன.

**10. எல்லா தரப்பட்ட மக்களாலும் வாசிக்கப்படக் கூடியது**

உலகத்தில் எந்த புத்தகமானாலும் அது சம்பந்தப்பட்டவர்கள் தான் வாசிக்க முடியும், அவர்களுக்குத் தான் பிரயோஜனமாயிருக்கும். ஆனால் பரிசுத்த வேதாகமமோ விஞ்ஞானிகள், மனவியல் நிபுணர்கள், தேசத்தை ஆளுகை செய்பவர்கள், வாலிபர்கள், திருமணமானோர், சிறு பிள்ளைகள்... போன்ற எல்லா தரப்பட்ட மக்களும் வாசிக்கப்படக்கூடிய அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட புத்தகமாகும்.

**11. அதிக எதிர்ப்புகளை சந்தித்து வரும் புத்தகம்**

“பரிசுத்த வேதாகமத்திற்கு பலமுறை சாவுமணி அடிக்கப்பட்டது, சவப்பட்டி செய்யப்பட்டது, பிரேதக் குழியும் வெட்டப்பட்டது. ஆனால் அடக்க ஆராதனையோ இன்று வரை நடைபெறவில்லை, இனிமேலும் நடைபெறாது” அல்லேலுயா. ஏனென்றால் இது வெறும் வார்த்தையல்ல தேவனுடைய வார்த்தை.

1.கி.பி. 300-ல் ரோம பேரரசரான டயோகிளிசியன் என்பவர் உலகிலுள்ள எல்லா வேதப் புத்தகத்தையும் அழிக்க உத்தரவிட்டார். ஆனால் அவருக்கு அடுத்து பேரரசராக வந்த கான்ஸ்டன்டைன் என்பவர் அரசாங்க செலவிலேயே வேதாகமம் அச்சடிக்க உத்தரவிட்டார்.

2. வால்டயர் என்பவர் 100 ஆண்டுகளில் உலகில் உள்ள எல்லா வேதாகமங்களும்

அழிக்கப்பட வேண்டும் என முயற்சித்தார். ஆனால் அவர் செத்து 50 ஆண்டுகளில் ஜெனிவா வேதாகம சங்கம் வால்டயர் தங்கியிருந்த பங்களாவை விலைக்கு வாங்கி, அதை வேதாகமம் அச்சடிக்கும் அச்சுக் கூடமாக மாற்றிவிட்டது.

"புல் உலர்ந்து பூ உதிரும், நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது" (ஏசாயா 40:8)

''வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"(மத்தேயு 5:18).

**12. வான்வெளி கலத்தில் எடுத்துச் செல்லப்பட்டது**

முதன் முதலாக வான்வெளிக் கலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமமே. 1968-ல் பிராங்க் போர்மேன், ஜேம்ஸ் லோவெல், வில்லியம் ஆண்டர்சன் போன்ற விண்வெளி வீரர்களால் அப்பொல்லோ 8 என்ற வானவெளி கலத்தில் வேதாகமம் மைக்ரோ பிலிமாக (Micro Film) எடுத்துச் செல்லப்பட்டது.

**13. வானொலியில் ஒளிபரப்பப்பட்டது**

1906-ம் ஆண்டு டிசம்பர் 4-ம் தேதிதான் உலகின் முதல் வானொளி ஒளிபரப்பு நடந்தது. அதில் கனடா நாட்டை சேர்ந்த ரெஜினால்டு பெசான்டின் என்பவர் லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் பிறப்பை குறித்த வசனங்களை முதன் முதலில் வாசித்தார்.

**14. பல முறை வாசிக்கப்படக் கூடிய புத்தகம்**

பரிசுத்த வேதாகமமே பல முறை ஒரே நபரால் வாசிக்கப்படக் கூடிய புத்தகம். உதாரணமாக ஜார்ஜ் முல்லர் என்பவர் தன் வாழ்நாட்களில் வேதாகமத்தை 200 முறை வாசித்திருக்கிறார்.

"...தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" (சங்கீதம் 19:10).

**15. அதிக விலை போன புத்தகம்**

கோடக்ஸ் சினாடிக்கஸ் என்ற வேதாகமத்தை இங்கிலாந்து தேசம் ரஷ்யாவிடமிருந்து 5,10,000 டாலர் விலை கொடுத்து வாங்கியுள்ளது.

"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" (சங்கீதம் 119:72).

**16. வாழ்க்கையை மாற்றும் புத்தகம்**

பிராங்க் மோரிஸன் என்பவர் ஒரு நாத்திகர். இயேசு உயிர்த்தெழவில்லை என்று ஒரு புத்தகத்தை 6 மாதத்திற்குள் எழுதி கிறிஸ்தவத்தின் அஸ்திபாரத்தை அசைக்கப் போகிறேன் என்றார். இதற்கு சில ஆதாரத்தை வேதாகமத்திலிருந்து எடுக்க வேண்டும் என்பதற்காக வேதத்தை வாசிக்க ஆரம்பித்தார். அதில் ஒரு வசனம் இவரை தொட இரட்சிக்கப்பட்டவராக "இயேசு மெய்யாக உயிர்த்தெழுந்தார்" என்ற புத்தகத்தை எழுதி முடித்தார். அந்த புத்தகத்தின் பெயர் "Who moved the stone" முதல் அத்தியாயம். "நான் எழுத மறுத்த புத்தகம்" என்பதேயாகும்.

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12).



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். ஆண்டு இறுதி தேர்வுகள் முடித்து நீண்ட நாட்கள் எதிர்பார்த்திருந்த விடுமுறைக்கு ரெடியாக இருப்பீர்கள் அப்படித்தானே? லீவு நாட்களில் விடுமுறை வேதாகம பள்ளியில் தவறாமல் பங்குபெறுங்கள். மேலும் இந்த நாட்களில் கணினி, ஓவியம், நீச்சல், தையல், சமையல் உள்ளிட்ட புதிய காரியங்களை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். ஓக்கே அங்கிள்.. சீக்கிரம் கதையை சொல்லுங்கனு நீங்க பேசுறது என் காதுகளில் கேட்கிறது. வாங்க போகலாம்..

ஆஸ்திரேலியாவில் வசித்து வந்த ஒரு தம்பதியினருக்கு 1982-ம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு இரண்டு கைகளும் கால்களும் இல்லாமல் பிறந்ததால் பெற்றோர் கண்ணீர்விட்டு கதறி அழுதனர். பின்னர் தங்கள் மனதைத் இறைநம்பிக்கையுடன் தேற்றிக்கொண்டு அக்குழந்தைக்கு நிக் உஜிசிக் என பெயர் வைத்தனர்.

அந்தக் குழந்தைக்கு கைகளோ கால்களோ முற்றிலும் இல்லை. இவைகளுக்கு பதிலாக அக்குழந்தையின் இடுப்போடு இரு விரல்கள் மட்டும் ஒட்டியபடி இருந்தன. அந்த இரு விரல்களையும் ஆபரேஷன் செய்து மருத்துவர்கள் பிரித்தனர். பிஞ்சு குழந்தை என்ன பாவம் செய்தது? ஓடியாடி விளையாட வேண்டிய வயதில் வீட்டின் மூலையில் பொம்மையை போல கிடத்தப்பட்டிருப்பான். வளர வளர மனகாயங்களும், தன் அகால பிறப்பை பற்றிய கேள்விகளும் மனக்கதவை தட்டிக்கொண்டே இருந்தது. பள்ளியில் சேர்க்க நிக் உஜிசிக்கை அழைத்துச் சென்ற பெற்றோருக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. எந்தப் பள்ளியும் அவனைச் சேர்த்துக்கொள்ளத் தயாராக இல்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து பள்ளியில் சேர்த்தனர். பள்ளியில் பல அவமானங்களைச் சந்தித்தார். அவரோடு பழகுவதற்கு நண்பர்கள் முன்வரவில்லை. சில முரட்டு மாணவர்கள் அவரது தோற்றத்தைக் கேலி செய்தனர். கிண்டலும் கேலியும் உச்சத்தைத் தொட்டபோது, குளிக்கும் தண்ணீர் தொட்டியில் தற்கொலைக்கு முயன்ற நிக் உஜிசிக்கை அவரது பெற்றோர் காப்பாற்றி சிகிச்சை அளித்தனர். மகனே, நீ பிறந்ததற்கு ஒரு நோக்கம் உண்டு. அந்த நோக்கம் நிறைவேற இயேசப்பா மேல முழுசா உன் நம்பிக்கையை வைத்து, நீ ஜெபம்பண்ணு என பெற்றோர் அறிவுரையும், ஆறுதலையும் வழங்கினர்.

இயேசப்பா மேல் நிக் உஜிசிக் வைத்த ஆழமான விசுவாசமும் உறுதியான மனதிடமும் அவனது எதிர்மறையான சூழ்நிலையில் பெரும் பெலமாக காணப்பட்டது. நடை உடை பாவனைகளில் கம்பீரம் வந்தது. அவமானப்பட்ட அதே பள்ளியில் மாணவர் தலைவரானார். கல்லூரியில் சேர்ந்தபோது அங்கும் கதாநாயகனாகக் கலக்கினார். கணக்கியல் துறையில் பட்டம் பெற்றார். இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாத நிக் உஜிசிக் இன்று ஸ்கேட்டிங் செய்கிறார், நீச்சல் போட்டிகளில்

பங்கேற்கிறார். செயற்கை கை பொருத்தி கார் ஓட்டுகிறார், தனது பாதத்தில் ஒட்டியிருக்கும் 2 சிறு விரல்களுக்கிடையே பேனாவை சொருகி ஓவியம் வரைகிறார், விரைவாக எழுதுகிறார், நிமிடத்துக்கு 45 வார்த்தைகளை கணினியில் டைப் செய்கிறார், எலெக்ட்ரானிக் ட்ரம்ஸ் இசைக்கிறார், உலகெங்கும் பயணித்து நம்ம இயேசப்பா பற்றி பிரசங்கம் பண்ணுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்த அவரது விசுவாசமும், விடாமுயற்சியும் தான் அவரது கைகளாகவும் கால்களாகவும் இன்று செயல்படுகிறது. திருமணம் செய்ய தகுதியே இல்லை என பலரால் அவமதிக்கப்பட்ட இவர், கானே மியாகரா என்ற பெண்ணை திருமணம் செய்து நான்கு குழந்தைகளுக்கு தகப்பனாகவும் உள்ளார். விரக்தியின் எல்லைவரை சென்று, பின் நம்பிக்கையை வளர்த்துக்கொண்ட நிக் உஜிசிக், இப்போது மற்றவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கற்றுத் தருகிறார். இதுவரை 58 நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறார். 60 லட்சம் பேருக்குத் தன்னம்பிக்கைப் பயிற்சி அளித்திருக்கிறார். இயற்கை தந்த சவால்களை எதிர்கொண்டு. சாதனையாளராக உயர்ந்து நிற்கும் நிக் உஜிசிக் அகால பிறவியாக பிறந்த தன்னால் சாதிக்க முடிகிறது என்றால், உங்களால் ஏன் முடியாது? என மேடைகள் தோறும் சவால் விடுகிறார்.

தம்பி தங்காய், உங்கள் தோற்றத்தையோ, இயலாமையையோ, குடும்ப சூழ்நிலைகளையோ குறித்து வருத்தப்படுகிறீர்களா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத்.6:27) என தேவன் கேட்கிறார். ஆகவே கவலைப்படுவதினால் ஒரு பயனுமில்லை, உங்கள் பலவீனத்தை பெலமாக்கும் சக்தியை தேவன் உங்களுக்குள் வைத்திருக்கிறார். ஆகவே உங்களிடம் இல்லாதவைகளை குறித்து கவலைப்படாமல் உங்களிடம் இருப்பவைகளை எண்ணி உங்களை நீங்களே மெச்சிக்கொள்ளுங்கள். உங்கள் பலம் என்ன என்பதை கண்டுபிடியுங்கள், உங்கள் பலவீனத்தை பலமாக்கும் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். நிச்சயம் நீங்களும் சாதிப்பீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

**மனன வசனங்கள்**

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப்பியர் 4:13)

உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். (சங்கீதம் 18:29)

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் மற்றொரு சிறுகதையுடன் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

**IN YOUR HOME**

- EXALT God
- EXEMPLIFY christlikeness
- ENCOURAGE faithfulness
- EDUCATE your children in God's ways
- ESTABLISH Godly values





# AGVBS
# சிறந்த முறையில் நடத்துவது எப்படி?

**Rev. பெகின் சாமுவேல்**
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த நாட்களில் நடைபெற்ற AGVBS Training Report ஐ சமர்ப்பித்து ஆரம்பிக்க விரும்புகிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த வருட AGVBS Training 'DHEEPAM' என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் 11 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 500 க்கும் மேற்பட்ட சபைகள் கலந்துகொண்டு இந்த வருட AGVBS Materials ஐ வாங்கி சென்றிருக்கின்றனர். சுமார் 3000 இயக்குநர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேரடியாக கலந்து கொண்டு பயிற்சி பெற்றிருக்கின்றனர். பயிற்சியில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்காக பயிற்சியானது YouTube மூலமாக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த வருடம் அச்சடிக்கப்பட்ட அனைத்து புத்தகங்கள் மற்றும் Pen Drive விற்று தீர்ந்து விட்டது. இந்த பயிற்சி முகாம்களை சிறப்பாக நடத்த எங்களுக்காக ஜெபித்த, பேருதவியாயிருந்த, உதவிக்கரம் நீட்டின, ஒத்துழைத்த ஸ்தாப தலைவர்கள், பிராந்திய மேற்பார்வையாளர்கள், மண்டல தலைமைப் போதகர்கள், ஸ்தல சபைப் போதகர்கள் மற்றும் AGCM மண்டல பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுமுறை நாட்கள் வந்துவிட்டன. எல்லா சபைகளும் விடுமுறை வேதாகம பள்ளி நடத்துவதற்காய் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிள்ளைகளும் இந்த நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். 5 நாட்களும் 5 வெவ்வேறு தலைப்புகளில் நாம் பாடங்களை கற்றுக்கொடுக்க இருக்கிறோம்.

1. மெய்யான தீபம்-சிறுபிள்ளைகள் பாவ இருளிலிருந்து விலகி தீபமாகிய இயேசுவை உள்ளத்தில் பெற்று வாழ கற்றுக்கொடுத்தல்.
2. பிரகாசிக்கும் தீபம் - இயேசுவை ஏற்றுக்கொண்டு வெளிச்சமான பிள்ளைகள் உலகத்திலுள்ள பாவ காரியங்களால் அவர்களின் தீபம் அணைந்துபோகாமல் பிரகாசிக்க கற்றுக்கொடுக்க இருக்கிறோம்.
3. அணையா தீபம் - இயேசு கிறிஸ்துவுக்காக அணையாத தீபமாக ஒளிவீசுகின்ற பிள்ளைகளாகவும், அவருக்காக ஒரு அணையாத தீபமாக எரிய வேண்டும். அதாவது இயேசுவுக்காக சாட்சியாக வாழ வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
4. நட்சத்திர தீபம்-சிறுபிள்ளைகள் இயேசுவாகிய மெய்யான தீபத்தை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல. அவர்களே தீபமாக மாறி இயேசுவைப் போல ஊழியம் செய்ய வேண்டும் என்பது இந்த நாளில் கற்றுக்கொடுக்கப்படும்.
5. ஜெய தீபம் - பிள்ளைகள் பரலோக வாழ்வை பெற இந்த உலக வாழ்க்கையில் எப்படி ஆயத்தமாக வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுத்தலே இந்த நாளின் நோக்கமாகும்.

**இந்த பகுதியில் எப்படி ஒரு வெற்றியுள்ள VBS நடத்துவது என்பதற்கு சில குறிப்புகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.**

1. முதலாவதாக, நாட்களை ஜெபத்துடன் போதகர், சிறுவர் ஊழிய ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து திட்டமிடுங்கள். To do list ஒன்றை தயார் செய்யுங்கள். அதனால் எந்த காரியங்களையும் மறந்துவிடாமல் சிறப்பாய் செய்ய முடியும்.

2. ஊழியத்தை சிறந்த முறையில் நடத்துவதற்கு தேவையான பொருளாதார தேவைகள், உதவியாளர்கள், ஆசிரியர்கள் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். பின்னர் சபையில் அறிவிப்பு கொடுத்து அதற்கான காரியங்களை செய்ய ஆரம்பியுங்கள்.

3. உங்கள் சபையில் நடக்கும் VBS-ஐ குறித்து promote செய்யுங்கள். அதற்காக நீங்கள் நோட்டீஸ் கொடுத்து மற்றும் Social media க்களில் அதிகமாக விளம்பரப்படுத்தலாம். அதனால் உங்கள் சபைக்கு அருகிலுள்ள இரட்சிக்கப்படாத பிள்ளைகளும் கலந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

4. VBS நடப்பதற்கு குறைந்தது 2 வாரங்களுக்கு முன் இயக்குநர்கள், ஆசிரியர்கள், Volunteers அனைவரும் இணைந்து ஒரு நாளைக் குறித்து உபவாசித்து சபையில் கூடி ஜெபியுங்கள். அந்த நாளிலே ஆசிரியர்களுக்கான வகுப்பை தீர்மானித்து பாடப்புத்தகங்களை ஆயத்தம் செய்ய கொடுங்கள். புதிதான ஆசிரியர்களுக்கு ஒரு Model lesson எடுத்து காண்பிக்கலாம். craft, charts செய்வதற்கான எல்லா பயிற்சிகளும் அந்த நாளிலே கொடுக்கப்பட வேண்டும்.

5. முடிந்தால் Beginner, Primary-க்கு ஒரு Director-ம், Junior, Inter-க்கு ஒரு Director-ம் நியமிக்கவும். அதே போன்று Beginner வகுப்புகளுக்கு இரு ஆசிரியர்களை நியமித்தல் நல்லது.

6. VBS நாட்களில் ஒவ்வொரு நாட்களையும் சிறப்பு நாட்களாக அனுசரியுங்கள் (Day of Salvation, Giving, Inspection, Anointing, Exam). பிள்ளைகளைக் குறித்த விவரங்களை சேகரித்து அவர்களுக்கு சபையில் நடைபெறும் ஞாயிறுபள்ளியைக் குறித்து அறிமுகப்படுத்துங்கள்.

7. முடிந்தால் பிற கிராமங்களில் சென்று VBS நடத்துங்கள். அதாவது Outdoor Sunday Class நடக்கும் இடங்களில் நடத்தலாம். அவர்களுக்கு சிறந்த பரிசுகளைக் கொடுங்கள்.

8. பிள்ளைகளை கூட்டிச் சேர்க்க அல்லது வரவேற்க Full body puppet, Clown dress யை உபயோகிக்கலாம். பிள்ளைகளை அவர்களின் நண்பர்களையும் அழைத்து வரச்சொல்லி, அழைத்து வரும்போது அவர்களுக்கு பரிசளித்து உற்சாகப்படுத்தலாம்.

9. பாடல் வேளைகளில் பிள்ளைகளுடன் சேர்ந்து ஆசிரியர்களும் பாடுவது action செய்வது நல்லது. அவர்களுக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

10. VBS முடிந்தபின் பிள்ளைகளை மீண்டும் தொடர்பணி செய்து அவர்களை சபையில் நடைபெறும் ஞாயிறு பள்ளிக்கோ அல்லது அவர்கள் இருக்கும் இடத்தில் ஞாயிறு பள்ளியை ஆரம்பித்தோ ஆண்டவருக்குள் தொடர்ந்து நடத்த தவறாதீர்கள்.

அன்பானவர்களே, இந்த ஆண்டு VBSயை சிறந்த முறையில் நடத்த உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்களுக்காக ஜெபிக்கிறேன். உங்கள் சபையின் VBS Reports க்களை எங்களோடு பகிர்ந்து கொள்ள மறவாதீர்கள். உங்களோடு நாங்களும் கர்த்தரை மகிமைப்படுத்த அது ஏதுவாயிருக்கும். கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

# திருமதி. குணசாலி

நீதிமொழிகள் 31: 10 - 31

## குணசாலியான பெண்

| | |
|---|---|
| காரியசித்தியுடையள் | : "தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள் (வச.13, 15, 19)" |
| விவேகமானவள் | : "...விசாரித்து வாங்குகிறாள்" (வச.16, 22, 24) |
| உத்தமி (அடக்கமாய் உடுத்திக் கொள்வாள்) | "அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது" (வச.25) |

## புரிந்துகொள்ளும் மனைவி

| | |
|---|---|
| கணவனின் நலனை நாடுபவள் | : "அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்"(வச. 12) |
| கணவனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் | : "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்" (வச.16, 22, 24) |
| கணவனின் உயர்வுக்கு ஒத்துழைப்பவள் | : "அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" (வச. 22, 24) |

## அரவணைக்கும் தாய்

| | |
|---|---|
| ஞானமாய் குடும்பத்தை உடுத்துவிப்பாள் | : "தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்புகளை உடுத்துவிக்கிறாள்"(வச. 21) |
| நன்றாக உணவளிப்பாள் | : "இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுக்கிறாள் " (வச. 15, 27) |
| சரியாகத் திட்டமிடுவாள் | : "தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள்" (வச. 14,18) |

## அன்பு காட்டும் அயலகத்தாள்

| | |
|---|---|
| ஏழைக்கு இரங்குபவள் | : "ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்" (வச. 20) |
| தேவையுள்ளோரை ஆதரிப்பவள் | : "சிறுமையானவர்களுக்குத் தன் கைகளைத் திறப்பாள்" (வச. 20) |
| ஆறுதலான வார்த்தை களைப் பேசுபவள் | : 'தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" (வச. 26) |

| | |
|---|---|
| அவளது மதிப்பு | : "அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" |
| அவளது பாராட்டு | : "அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி" என்கிறார்கள் |
| அவளது மேன்மை | : "நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள்" |
| அவளது இரகசியம் | : "கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்" |

**நீங்கள் எப்படி? சோதித்துப் பாருங்கள்!**

## HOW TO KNOW GOD'S WILL?

There are five specific ways in which God guides us. It is listed below in their order of importance.

1. **Commanding Scripture:** It means that believers are to be informed by the worldview and values contained in God's Word. God will never guide us to do things that contradict His Word.
2. **Compelling Spirit:** This implies that we have sufficient spiritual maturity to be able to discern the difference between the guidance or prompting of God's Holy Spirit and our personal feelings. Just because we feel something doesn't mean that God is behind it or in it.
3. **Common Sense:** a reminder of the important difference between authentic faith and naive credulity. God gives us common sense for a reason. It's important that we make good use of it.
4. **Counsel of the Saints:** Like it says in Proverbs 15.22, "Plans fail for lack of counsel, but with many advisers they succeed." It's never a bad idea to seek the wisdom of mature believers when we're considering a course of action.
5. **Circumstantial Signs:** A lot of folks seem to think that the main way God speaks to us is through circumstantial signs. In fact, it's number five, at the bottom of the list. While circumstantial signs sometimes may be a way God guides us, they are not necessarily the chief or most important way. Rather than focusing on signs, really get to know your Bible, be open to the guidance of God's Holy Spirit, use your common sense, and seek the counsel of the saints.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -4 (சரியான விடைகள்)

1. இஸ்ரவேல் புத்திரரின், அவர்களுக்குத் (29:45)
2. மலையிலே உனக்குக், மாதிரியின்படியே (25:40)
3. தீமை செய்ய (23:2)
4. தூபங்காட்டுகிறதற்கு, சீத்திம் (30:1)
5. கண்ணுக்குக், பல்லுக்குப், கைக்குக், காலுக்குக் (21:24)
6. மகா பரிசுத்த ஸ்தலத்திலே, கிருபாசனத்தை (26:34)
7. அங்கியின், பொன்மணியும், மாதளம் பழமும், பொன்மணியும், மாதளம் பழமுமாய்த் (28:34).
8. கர்த்தருடைய மகிமை (24:16)
9. சூரியன் உதிக்கிற திசையாகிய, ஐம்பது முழ (27:13)
10. நியாயாதிபதிகளைத், உன் ஜனத்தின் அதிபதியைச் (22:28)
11. பஞ்சுநூலால் நெய்யப்பட்டிருந்தது. (38:16)
12. உங்களுக்கு உண்டாக்க வேண்டாம் (34:17)
13. கொலை செய்யப்பட வேண்டும் (31:15)
14. வாசஸ்தலத்தை நிரப்பிற்று (40:34)
15. சீத்திம் மரத்தால் செய்தான் (36:20)/
    சீத்திம் மரத்தால் உண்டுபண்ணுவாயாக (26:15).
16. கிறுக்கிப்போடுவேன் (32:33)
17. சகல வேலைகளையும் செய்தார்கள் (39:42)
18. மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள் (35:29)
19. பொன்தகட்டால் மூடினான் (37:28)
20. உயிரோடிருக்கக்கூடாது என்றார் (33:20)

## போட்டி எண் : 4 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:** இவாஞ்சலின்; பிரபா; ராணி பிளசிங்; எஸ்தர் மாசிலாமணி; முத்துலெட்சுமி ராஜ்; ரம்யா; மேரி; ரமணி; புஷ்பவல்லி; பிரியா; E.கலா; சித்ரா பிளஸ்சி; எஸ்தர் (அச்.பு); மஞ்சு; J.சுமதி; கலைவாணி; விஜி; கிறிஸ்டி; மயில்; மரகதம்; தங்கமணி; கோகிலா; குளோரி; ஜெயசிலின்; பூங்கோதை; அன்னாள்; முத்துகோபால்; K.சாராள்; பிரேமலதா; T.ஜெபா; | **திருநின்றவூர்:** வின்சி; லீலா பரணி; அனிதா; மார்த்தாள்; ஏஞ்சலின் ஜெனிஸ்; லாவண்யா; ரூத்; மாலதி; சரண்யா; பாத்திமா மேரி; எழிலரசி; |**ஆறுமுகநேரி:** கிருபா; கௌசல்யா; ஏஞ்சல்; சிவகாமி எஸ்தர்; நிவேதா; செல்வபிரியா; அனன்சி அருண்;| **இறைச்சகுளம்:** சகாய சஜி ஜெனிபர்; மகிழ் ஜெயந்தி; சுபாஷினி; ஜெஸ்மின்; எஸ்தர்; ரேணு ரூபன்; |**மதுரை:** பரிமளா ஜேம்ஸ்; மேரி நற்குணம்; தங்கமணி; | **ஸ்ரீவில்லிபுத்தூர்:** பாஞ்சாலி Tr; மாதவி; அழகு நாச்சியார்; T.மெசி; வசந்தா; எஸ்தர் இந்திரா; | **மடத்துக்குளம்:** பரிமளா; எர்னால்ட் எபிநேசர்; சேர்மக்கனி; ஏர்னஸ்ட் எபினேசர்;|**எடப்பாடி:** சத்யா; அஞ்சலி அரசு; மாலதி; பிரியதர்ஷிணி; ஜோசப்மேரி; |**சேத்துப்பட்டு:** சுகந்தி பெனடிக்; சுதா சார்லின்; பெர்சியாள் செல்வி; மாதரசி; ரெக்ஸி ஈஸ்வரன்; மரகதம்; |**திருச்சி:** ஜஸ்டஸ் டேனியல்; ஷிர்லி; F.சாரா; கிறிஸ்டி மகாலக்ஷ்மி; சாந்தி ஆனந்தன்;|**கொட்டிவாக்கம்:** அகஸ்டினா மதினா; அஞ்சலி; பிளஸ்சி; எப்சிபா;|**வளசரவாக்கம்:** பிரின்ஸ் குளோட்டில்டா; நிர்மலா எஸ்தர்; ஜெபசெல்வி தனராஜ்; | **மதுராந்தகம்:** ஜெனிபர் நிர்மல்குமார்; சுனிதா ரோஸ்லின்; பார்கவி; அஜந்தா பிளசன்; |**இளையரசனேந்தல்:** சங்கீதா; அந்தோணியம்மாள்; ஜெஸி ஐடா; மெர்ஸி;|**கடையநல்லூர்:** தங்கராஜ்; வினோலியா; செல்வி இந்திராணி; |**கடாட்சபுரம்:** சுகிர்தா; ரேவதி கில்பர்ட்; சுசிலா;|**தேனி:** தனம்; அனுஷியா; J. கிருபா; |**அச்சிறுப்பாக்கம்:** சிலம்பரசன்; நான்சி;|**ஆண்டிபட்டி:** தபீத்தாள் ராணி; K.மேரி; | **நாசரேத்:** எஸ்தர்; மதன்; செல்வம் சிம்சோன்; |**சென்னை:** மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரிதியா; |**கோயம்புத்தூர்:** கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; குளோரிபால்; | **பெங்களூர்:** தேவபிரியா அந்தோணி; |**நாகர்கோவில்:** வசந்தா தர்மராஜ்; இந்திரா சரோஜினிபாய்; |**சாத்தூர்:** லாவண்யா; | **பெருங்குளம்:** ஜெயலின்சிங்; ஏஞ்சல்; |**பெருந்துறை:** எப்சிபா; கெத்சியாள்; |**சிட்லபாக்கம்:** ரெபெக்காள்; தாமரைச்செல்வி; ரேணுகா; |**அய்யப்பாக்கம்:** அம்மணி; | **உடுமலைப்பேட்டை:** ஜெயந்தி; பிரியா ரவி; சந்தான மதன்; | **வடமதுரை:** ஜனனி சரத்; | **இராமன் புதூர்:** லீதியாள்; ஜான்சி ராணி; |**மேட்டூர்:** பத்மினி ஸ்டீபன்; | **நெய்யூர்:** ஷீலா ராபர்ட்; |**திருவள்ளூர்:** லில்லி யோவான்; |**கவரைபேட்டை:** தங்கம்; | **பழனி:** T.பிரீத்தி; | **புதுச்சேரி:** எஸ்தர் சுரேஷ்; | **வில்லுக்குறி:** கிருஷ்ணகுமாரி; | **ஓசூர்:** ஜெமிந்தா; விஜயா; |**நாமக்கல்:** J.பியூலா; |**ஏழாயிரம் பண்ணை:** R.ஜாய்; செல்வமலர்; |**வடக்கு ஆத்தூர்:** V.மகேஸ்வரி;|**திருநெல்வேலி:** எஸ்தர் மகாராஜன்; **தூத்துக்குடி:** சில்வெஸ்டர்; | **ஆசாரிப்பள்ளம்:** இந்திரா தம்பி; | **ஐராவத நல்லூர்:** தங்கம் ஜேம்ஸ்; | **சின்னா வால்டயர்:** சாந்தி; | **கீழவேளூர்:** கிரேனாப்பு; |**ஆலங்குளம் (வி):** S.மரியா; ஸ்டெல்லா மேரி; |**கள்ளக்குறிச்சி:** ரூத்; | **பாவூர்சத்திரம்:** ஜெசிலி; |**திருவண்ணாமலை:** மல்லிகா;|**சொக்கன்குடியிருப்பு:** ஜான்சி ராணி; |**மயிலாபுரம்:** முத்துகிருஷ்ணன்; |**பெரியகுளம்:** எப்சிபா;|**நாகமலை:** விஜிலா; ஆனந்தி;|**கம்பம்:** ஜோதிமணி; |**சின்னாளபட்டி:** சரண்யா; | **திண்டிவனம்:** சாராள் அறிவுச்செல்வி; |**திருவைகுண்டம்:** R.பகவதி; | **KTC நகர்:** ரத்னா; |**நசியனூர்:** ஹேமலதா; | **நாகலாபுரம்:** சாராள்; | **கூடன்குளம்:** சுரேஷ்; | **நெல்வாய்:** சுசித்திரா; | **அகரக்கட்டு:** அம்சா பிரவீன்; | **ஆம்பூர்:** ரூபி மனோகரன்; | **வத்ராப்:** சிவகாமி; | **மூக்குப்பேறி:** செல்லத்தாய் ராணி;| **கடலையூர்:** ஆபிரகாம்; |**ஆழ்வார் திருநகரி:** பனிமலர்; | **அஞ்சுகிராமம்:** ஆசீர்வாதம்;| **சேலம்:** R.P.டேனியல்; | **மூலைக்கரைப்பட்டி:** தமிழ்செல்வி;|**திண்டுக்கல்:** வின்சி கிறிஸ்டோபர்; லதா; |**பழைய காயல்:** எலிசபெத்; |**பாளைங்கோட்டை:** சாந்தகுமாரி; |**அரசூர்:** ரோஸ்லின் சாந்தி; | **தேவகோட்டை:** மேரிராபின்; | **பேரையூர்:** A. அன்னாள்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -5

### லேவியராகமம்

**குறிப்பு : முழு வசனத்தையும் எழுதாமல் தேவையான பதிலை மட்டும் இருப்பிடத்துடன் எழுதவும்.**

1. எது ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது?
2. எது கர்த்தருக்கு உரியது?
3. எது விடியற்கால மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது?
4. எது அங்கிகரிக்கப்படுவதில்லை?
5. எது எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது என்று சொல்லப்பட்டிருக்கிறது?
6. எது பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள்?
7. எது தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்?
8. எது விசேஷித்த ஓய்வு நாள்?
9. எது ஒருபோதும் அவிந்துபோகலாகாது?
10. எது விடுதலையின் வருஷம்?
11. எப்படி சம்பாதித்த பொருளை திரும்பிக் கொடுக்கக்கடவன்?
12. எதற்கு இடங்கொடாதே?
13. எந்த பலியின் கொழுப்பை பலிபீடத்தின் மேல் தகனிக்கக்கடவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது?
14. எதை கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்க வேண்டும்?
15. யாரை அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு பட்சித்தது?
16. யாரை நாடி தேடாதிருங்கள்?
17. யாரை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்?
18. யார் தேவனுடைய அப்பத்தைச் செலுத்த சேரலாகாது?
19. யார் தன் பாவத்தை சுமப்பான்?
20. நீ படைக்கிற எந்த போஜனபலியும் எதினால் சாரமாக்கப்பட வேண்டும்?
21. இரத்தம் எதற்கு சமானம்?
22. கர்த்தருடைய நாமத்தை நிந்தித்து தூஷித்தவனின் தாயின் பெயர் என்ன?
23. செத்தவனுக்காக எவைகளை செய்யக்கூடாது?
24. ஒரு சேக்கல் எத்தனை கேரா?
25. உங்களில் ஐந்துபேர் எத்தனை பேரையும், நூறுபேர் எத்தனை பேரையும் துரத்துவார்கள்?

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.06.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## AGVBS ஆசிரியர்கள் பயிற்சி-2024













## வடமேற்கு மிஷனரி இலாகா தலைவர்கள் கூடுகை









## AGTBC பட்டமளிப்பு விழா-மதுரை







## திரித்துவ வேதாகமக் கல்லூரி பட்டமளிப்பு விழா-செங்கோட்டை








**BOOK POST**

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664